தியாகத் தீபிகை

௨.11.1938

13

2

JL
O22m211, N26
N38·13·2
159934

149.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்,

மாதந்தோறும் வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸமயப்ரகாசந பத்திரிகை.

ஸம்புடம் 13] [நெம்பர் 2.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

2—11—1938

OFFICE OF THE REGISTRAR OF ... 12 APR 1939 MADRAS

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 3 பாரம்.

2. ஆசார்யஹ்ருதயஸாரம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணு 5] 1938 [தபால் சார்ஜ் தனி

இந்த தீபிகை கிடைக்குமிடங்கள் :—

நியூமன் பிரஸ், 19, டேவிட்ஸன் தெரு, ஜி. டி. மதராஸ்.

A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், 45, மௌபரீஸ் ரோட், மைலாப்பூர்.

G. ரங்கய்ய நாயுடு, 27, சிங்கன்னசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை.

Printed & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St., Madras.

APR 1939

149

* * * [அப்பனே!] பிரமன் முதலானோர்க்கும் காணமுடியாதிருக்கிற உன்னுடைய அழகைக் காண வேணுமென்று ஆசைப்பட்டு 'இப்பொழுதே வந்திடாய்' என்று அபேக்ஷித்து, நாம் அபேக்ஷித்தபடியே வந்தருள்வன் என்று நம்பி, வரும்போதை யழகைக் காணவேணுமென்று பாரித்திருக்கின்றேனே! என்னுடைய சாபல்யத்தை என் சொல்லுவேன்! என்கிறார்.

அப்பன் என்று உபகாரம் செய்பவனைச் சொல்லுகிறது. நீ முகங்காட்டாதபோதும் உன்னையே சொல்லிக் கூப்பிடும்படியாக இவ்வளவு மஹோபகாரம் பண்ணினவனே! என்றபடி. எனக்கு நீ அருள்செய்ய நினைத்தால் என்னுடைய பாவங்கள் குறுக்கே நிற்கவற்றோ? "எப்போதுங் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே என் வினைகளைத் துணிக்கத் திருக்கையிலே திவ்யாயுதமுண்டே யென்பார் அடலாழியானே! என்கிறார். கையுந் திருவாழியுமான அழகு காண ஆசைப்பட்டன்றோ நான் கூப்பிடுகிறது என்றவாறுமாம்.

ஆழ்கடலைக் கடைந்த துப்பனே!=உன்னளவிலே பல்லாண்டு பாடாதே உன் திருமேனியை நோவுபடுத்திக் காரியங்கொள்ள நினைப்பார்க்கும் காரியம் செய்து தலைக்கட்டுகின்றவுனக்கு என்னெதிரேவந்து நின்று காட்சி தருகைக்குத் திருவுள்ளமுண்டாகாதது என்னோ? 'நம் உடம்பை நோவுபடுத்துகிறவர்களுக்குத் தான் நாம் காரியம் செய்யக்கடவோம்' என்று ஏதேனும் நியமம் கொண்டிருப்பதுண்டோ? "கடலைக்கடைந்த துப்பனே!" என்ற இவ்விடத்தில் விவக்ஷிதமான துப்பாவது — "விண்ணவரமுதுண அமுதில்வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!" என்கிறபடியே தேவர்களுக்கு உப்புச்சாறு எடுத்துக்கொடுக்கிற வியாஜத்தாலே தான் பெண்ணமுதாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மியை லபித்த ஸாமர்த்தியம்.

உன் தோள்கள் நான்கும் கண்டிட=கடல்கடைந்த காலத்திலே தேவர்கள் எப்போது நம் உணவு கடலில் நின்றும் கிளரப்போகின்றதோ என்று கடலைக்கவிழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்களே யல்லது தோளழகிலே துவக்குண்டு காப்பிட்டார்களில்லை; அக்குறைதீர "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" என்று திருத்தோள்களுக்கு மங்களாசாஸநம் பண்ணவேணுமென்றன்றோ நான் பாரித்திருப்பது. கண்ணபிரானாய் வஸுதேவ க்ருஹத்திலே அவதரித்தபோது "ஜாதோஸி தேவ தேவேஸ! ஸங்க சக்ர கதாதர!" என்று நான்கு திருத்தோள்களோடே அவதரித்தாயென்றும், பிறகு மாதாபிதாக்கள் "உபஸம்ஹர விச்வாத்மந்! ரூபமேதத் சதுர்ப்புஜம்" என்று, நான்கு திருத்தோள்களோடு கூடின இத்திருவுருவத்தை மறைத்திடாய் என்று வேண்டிக்கொள்ள, 'அப்படியே மறைத்திட்டதாகவும், உகவாதார்க்குக் கூசி மறைத்திட்ட அதனை உகந்த பெண்களுக்குக் காட்டிக்கொடுத்தாயென்றும் கேள்விப்படுகிறேன்; அவ்வண்ணம் எனக்கும் நீ

159934

காட்டிக்கொடுக்க நேர்ந்து நான் காணப்பெறலாகுமோ வென்று பாரித்துக் கிடக்கின்றேனென்பது உள்ளுறையும் கருத்து.

கண்ண நீர் கொண்டு=ஆனந்தாச்ரு, சோகாச்ரு என்று இருவகையான கண்ணீர்கள் உண்டு. அவ்விரண்டும் இங்கு விவக்ஷிதமாகலாம்; அத்திருவுருவத்தை நினைத்தவளவிலேயே ஒரு ஆனந்தம் பெருகிச் செல்லுமாகையாலே ஆனந்தாச்ருவாகும். 'நாம் பாரிக்கிறபடி நமது கண்களுக்குப் புலப்படவில்லையே!' என்று வருத்தமுமாகையாலே சோகாச்ருவுமாகும். ஆவி துவர்ந்து துவர்ந்து—பிராணன் பசையற உலர்ந்து என்றபடி. ஆவி அடியோடு தொலைய மாட்டேனென்கிறது என்கிற வருத்தத்தைக் காட்டினபடி.

இப்பொழுதே வந்திடாயென்று = தாமதித்து வந்தாயாகில் திருப்புளியாழ்வாரைக் கட்டிக்கொண்டு அழவேண்டியதாகுமத்தனை யுனக்கு; இப்பொழுதே வந்தாயாகில் என் கண்ணாலே விழிக்கப்பெறுவாய் என்றவாறு. ஏழையேன் நோக்குவனே!=இங்ஙனே சொன்னவளவிலும் ஸர்வஜ்ஞன் நினைவறிந்து வாராதிருப்பனோ? அவசியம் வந்தே தீருவன்; ஆபத்துமிகுந்தவாறே தவறாது வந்து தோன்றுகிற வழக்கத்தை கஜேந்திராழ்வான் ப்ரஹ்லாதாழ்வான் போல்வார் பக்கலிலே கண்டிருக்கிறோமாகையாலே வந்தே தீருவன் என்று நிச்சயித்து சாபலத்தாலே திசையெங்கும் நோக்குகின்றேன் என்கை.

ஏழையேன் நோக்குவனே யென்கிறவிடத்தில் ஒரு ஐதிஹ்யமுண்டு; சோழராஜஸதஸ்ஸிலே திருக்கண்களையிழந்த கூரத்தாழ்வானை உடையவர் வரதராஜன் விஷயமாக ஒரு ஸ்தவம் பணிக்கும்படி நியமித்தார்; பேரருளாளன் வரந்தரும் பெருமாளென்று பேர்பெற்றிருக்கையாலே திருக்கண் தந்தருள்வன் என்று திருவுள்ளம்பற்றி அப்படி நியமித்தருளினார். ஆசார்ய நியமனத்தையடிபொற்றி ஆழ்வானும் வரதராஜஸ்தவமருளிச்செய்து அதை உடையவர் திருமுன்பே விண்ணப்பம்செய்து வருகையில் "நீலமேகநிபம் அஞ்ஜநபுஞ்ஜச்யாம குந்தலம் அநந்த சயம் த்வாம். அப்ஜபாணிபதம் அம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குருகரீஶ! ஸதா மே." என்கிற ச்லோக ரத்நத்தைத் திருச்செவி சாத்தின உடையவர் "ஆழ்வான்! இப்பாசுரம் கேட்டால் பெருமாள் இரங்காமையில்லை; உன்முகத்தைக்காட்டு பார்ப்போம்" என்றாராம். கனிந்த சொற்களுக்கு எம்பெருமான் காட்சிதந்தே தீருவன் என்று அன்பர்கள் நம்புதற்குறுப்பான ஐதிஹ்யம் இது.

நோக்கிநோக்கியுன்னைக்காண்பான் யானெனதாவியுள்ளே *
நாக்குநீள்வன்ஞானமில்லை நாள்தோறுமென்னுடைய *
ஆக்கையுள்ளுமாவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும்
நீக்கமின்றிஎங்கும்நின்றாய்! நின்னையறிந்தறிந்தே. (௬)

நாள் தோறும்	ஸர்வகாலத்திலும்
என்னுடைய	என்னுடைய
ஆக்கை உள்ளும்	சரீரத்தினுள்ளும்
ஆவி உள்ளும்	ஆத்மாவினுள்ளும்
அல்ல புறத்தின் உள்ளும்	மற்றுமுண்டான இந்த்ரியம்முதலானவற்றிலும்
நீக்கம் இன்றி	நீங்காமல் [ஒன்றையும் விடாமல்]

எங்கும் நின்றாய்	எங்கும் வியாபித்திருக்கின்ற பெருமானே!
நின்னை	உன்னை
அறிந்து அறிந்தே	(அருள்செய்யத் திருவுள்ளமில்லாதவன் என்று) நன்றாக நான் அறிந்துவைத்தும்
யான்	நான்
உன்னை காண்பான்	உனது திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவிக்க வேண்டி
நோக்கி நோக்கி	எல்லாத் திசைகளிலும் பார்த்து
எனது ஆவி உள்ளே	எனது நெஞ்சுக்குள்ளே
நாக்கு நீள்வன்	நாக்கை நீட்டுகின்றேன் [ஆசைப்படுகின்றேன்]
ஞானம் இல்லை	இப்படிப்பட்ட நான்விவேகமற்றவனத்தனை.

* * * [நோக்கி நோக்கி.] எம்பெருமானே! என்னுள்ளே நீ நிறைந்திருந்தும் எனக்கு நீ உன்னைக் காட்டாமலிருப்பது திருவுள்ளமில்லாமையாலன்றோ என்று நான் அறிந்து வைத்தும் அவிவேகத்தாலே காணவாராய்! காணவாராய்! என்று கதறுகின்றேன் என்கிறார்.

இறைப்பொழுதும் ஓயாதே எட்டி யெட்டிப் பார்க்கின்றேன்; எந்தத் திசைவழியாக வருவாயென்று தெரியாமையாலே நாற்புறமும் விழித்துப் பார்க்கிறேன்; எதற்காகவென்னில்; உன்னைக் காண்கைக்காகவத்தனை. காண்பதற்கு மேலே வேறொரு ப்ரயோஜனத்தைக் கனவிலும் கருதாத குடியிலே யன்றோ பிறந்திருப்பது. 'இப்படி எனக்கு ஆசை' என்று வாய்விட்டுச் சொல்லமாட்டாதே நாக்கை நீட்டியிருக்கின்றேன். நாக்கை நீட்டுவானேன் என்னில்; "கன்னலங்கட்டி தன்னைக் கனியை யின்னமுதந் தன்னை" என்றும் "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே" என்றும் "விழுமியமுனிவர் விழுங்குங் கோதிலின் கனியை" என்றும் சொல்லுகிறபடியே பகவத்விஷயமென்பது பரமபோக்ய வஸ்துவாகையாலே "தூயவமுதைப் பருகிப்பருகி" "அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே" என்கிற கணக்கிலே நாவுக்கும் விஷயமுண்டே.

நாக்கு நீட்டினவளவில் விரும்பின பொருள் கிடையாதொழிந்தவாறே 'இதில் நாம் நசை வைப்பது தகுதியன்று' என்று கைவாங்கி நிற்பதன்றோ ப்ராப்தம். அரிதென்னுமிடம் அறியாதே சிறுகுழந்தைகள் நாக்கை நீட்டினபடியே யிருப்பதுண்டு; அதுபோலவே நானும் என்று காட்டுகிறார் ஞானமில்லையென்பதனால்.

ஞானமில்லை என்றதை உபபாதிக்கிறது மேலுள்ளதெல்லாம். என்னுடைய சரீரத்திலும் ஆத்மாவிலும் மற்றும் இந்த்ரியாதிகளிலும் ஒன்றையும் விடாதே எல்லா ஸ்தலத்திலும் வியாபித்து நின்றாய் நீ என்பதை அறியேனோ? இப்படிப்பட்ட நீ என் கண்ணுக்குத் தோற்றவேணுமென்று திருவுள்ளம்பற்றினாயாகில் உடனே தோற்றியிருக்கலாமே; "வாசி வல்லீர்" என்கிறபடியே இன்னாருக்குத்தான் தோற்றவேணும் இன்னாருக்குத் தோற்றலாகாது என்று ஒரு நிர்ப்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறாயென்று நான் தெரிந்துகொண்டு வாய்மூடியிருக்கை அழகியது. அப்படியிருக்கின்றிலேனே; உன் கருத்தையறிந்து

வைத்தும் ஆறியிருக்கின்றிலேனாகையாலே எனக்கு ஞானமில்லை யென்னுமிடம் வலித்தமேயன்றோ என்றாராயிற்று.

ஞானமில்லை என்றதற்கு ஒரு உள்ளுறை பொருளுண்டு; மற்றையோருடைய ஞானம் போன்றதன்று என்னுடைய ஞானம்; "மயர்வற மதிநலமருளினன்" என்றபடி பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தந்தருளியானாகையாலே "அத்யந்த பக்தி யுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:" என்ற கட்டளையிலே துடிக்கின்றேன் என்பதாம். "காற்றும் கழியும் கட்டி அழக்கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நால்வரம்பில்லையே" என்ற ஆசார்யஹ்ருதய திவ்ய ஸூக்தியும் இதற்கு ஸம்வாதமாக அநுஸந்தேயம்.

"நீக்கமின்றி யெங்கும் நின்றாய்" என்றவிடத்திலே நம்பிள்ளையீடு;— "கிழிச்சீரையிலே தனங்கிடக்கப் புறங்கால் வீங்குவாரைப்போலே காணும் இவர்படி" என்று. (அதாவது) உள்ளே நிதி கிடக்கச்செய்தேயும் சிலர் வெளியிலே செல்வம்பெற வேணுமென்று பாரிப்பர்; அதுபோலே ஆழ்வார் தம்மிடத்திலே அந்தர்யாமியாய்ப் பூர்ணனாயிருக்கின்ற பரம புருஷனை அநுபவித்துத் த்ருப்திபெறமாட்டாதே பாஹ்யாநுபவத்திலே மநோரதத்தைப் பெருக்கித் துவள்கின்றார் என்கை. .... (சு)

அறிந்தறிந்துதேறித்தேறி யானெனதாவியுள்ளே *
நிறைந்தஞானமூர்த்தியாயை நின்மலமாகவைத்து *
பிறந்தும்செத்தும்நின்றிடறும் பேதைமைதீர்ந்தொழிந்தேன் *
நறுந்துழாயின்கண்ணியம்மா! நானுன்னைக்கண்டுகொண்டே. (எ)

நறு துழாயின் கண்ணி அம்மா	பரிமளம்மிக்க திருத்துழாய் மாலையையுடைய	எனது ஆவி உள்ளே	என் நெஞ்சுக்குள்ளே
நான் உன்னை கண்டுகொண்டு	நான் உன்னை (மாநஸஸாக்ஷாத்காரமாக ஸேவிக்கப்பெற்று	நிறைந்த ஞானம் மூர்த்தியாயை	பரிபூர்ண ஜ்ஞானஸ்வரூபனான உன்னை
அறிந்து அறிந்து	உன்னுடைய உபாயத்வத்தையும் உபேயத்வத்தையும் நன்றாக அறிந்து	நின்மலம் ஆக வைத்து	விசதமாக அநுபவித்து
தேறி தேறி	மிக்க தெளிவையுடையேனாகி	பிறந்து செத்தும் நின்று இடறும் பேதைமை தீர்ந்து ஒழிந்தேன்	பிறப்பதும் சாவதுமாயிருந்து படுகிற அஜ்ஞான ஸம்ஸாரத்தைத் தவிர்த்துக்கொள்ளப் பெற்றேன்.
யான்	இப்படித் தெளிவுபெற்ற நான்		

* * * [அறிந்தறிந்து]. 'ஆழ்வீர்! * நாக்கு நீள்வன் ஞானமில்லை * என்று உம்மை நீர் நிந்தித்துக்கொள்வதானது என்னுடைய நிந்தையிலன்றோ முடிந்து நிற்கிறது; உமக்கு நான் ஒரு உபகாரமும் செய்யவில்லைபோலே வருந்துகின்றீரே; நன்கு ஆராய்ந்து பாரும்; எத்தனை உபகாரங்கள் என்னால் பெற்றிருக்கிறீரென்

பதை அறிந்து சொல்லும்' என்று எம்பெருமான் அருளிச்செய்ய, 'பிரானே! சில உதவிகளை நீ செய்ய நான் பெற்றதுண்டு; அடியோடு ஒன்றுமில்லையென்று சொல்லுகின்றிலேன்; பெற்றவளவு போராது என்கிறேனத்தனை' என்று சொல்லத் தொடங்கி, பெற்ற அளவு இன்னதென்கிறார் இப்பாட்டில்; பெறவேண்டியதை மேற்பாட்டிலே சொல்லவிருக்கிறார்.

இப்பாட்டில், "நறுந்துழாயின் கண்ணியம்மா! நானுன்னைக்கண்டுகொண்டு பேதைமை தீர்ந்தொழிந்தேன்" என்றருளிச்செய்வதைப் பார்த்தால், * கோலமேனி காணவாராய் * என்று அபேக்ஷித்தபடியே எம்பெருமான் வந்து காட்சிதந்துவிட்டதாகத் தோன்றும். உண்மை அப்படியில்லை; அடுத்தபாட்டில் "கண்டுகொண்டு பாடியாட—வந்திடகில்லாயே" என்றிருக்கையாலே இன்னமும் காணப்பெற்றிலர் என்றே கொள்ளவேணும். ஆனால், இப்பாட்டில் நானுன்னைக் கண்டுகோண்டே என்கிறாரே; இதற்குப்பொருள் என்? என்னில்; மாநஸஸாக்ஷாத்காரமென்றும் பாஹ்யஸாக்ஷாத்காரமென்றும் காண்கை இரண்டு விதம்; * முனியே நான்முகனுக்கு உட்பட்டதெல்லாம் மாநஸஸாக்ஷாத்காரமேயாகும். ஆகவே இப்பாட்டில் சொன்னது மாநஸஸாக்ஷாத்காரமென்றும், மேற்பாட்டில் விரும்புவது பாஹ்யஸாக்ஷாத்காரமென்றும் அறிக. ஆசார்யஹ்ருதயத்தில் (முடிவில்) "கமலக் கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய்" என்றருளிச்செய்தது இங்கே அநுஸந்தேயம்.

அறிந்தறிந்து என்றும், தேறித்தேறி என்றும் இரட்டித்துச் சொன்னதன் கருத்தாவது, எம்பெருமானருளாலே அர்த்த பஞ்சகத்தையும் தாம் அறியப்பெற்றபடியை அறிந்தறிந்து என்று கூறி, அதில் ஒவ்வொன்றிலும் நல்தெளிவு பெற்றபடியைத் தேறித்தேறி யென்று கூறினராகை. (அது எங்ஙனேயென்னில்); 1. எம்பெருமானுடைய பரத்வத்தை யறிதல் பரஸ்வரூபஜ்ஞானம்; 'அவன் ஆச்ரித பாரதந்த்ரியமே வடிவாகவுடையவன்' என்று அறிதல் அந்த ஜ்ஞானத்தின் தெளிந்தநிலை 2. நாம் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவர்கள் என்று அறிதல் ஸ்வஸ்வரூப ஜ்ஞானம்; பாகவத சேஷத்வபர்யந்தமாக அறிதல் அந்த ஞானத்தின் தெளிந்த நிலை. 3. எம்பெருமானுடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றுகை உபாயஸ்வரூபஜ்ஞானம். அவனை நாமாகப் பற்றுகிற பற்றும் அஹங்கார கர்ப்பமாகையாலே அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகமென்றிருக்கை அந்த ஞானத்தில் தெளிந்தநிலை. 4. * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்கை புருஷார்த்த ஸ்வரூப ஜ்ஞானம். கைங்கரியம் செய்வதனால் உண்டாகிற ஆனந்தம் எம்பெருமானுடையதேயாகும்; அந்த ஆனந்தத்தைக்கண்டு சைதந்ய கார்யமாக ஆனந்திப்பதே நமக்கு உற்ற ஆனந்தம் என்றிருக்கை அந்த ஞானத்தில் தெளிந்தநிலை. 5. அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யமென்றிருக்கை விரோதிஸ்வரூப ஜ்ஞானம். கைங்கர்யத்தை நான் செய்கிறேன், எனக்காகச் செய்கிறேன் என்று செய்கை பரமவிரோதியென்

றுணர்கை அந்த ஞானத்தில் தெளிந்தபடி. ஆகவிப்படி அர்த்த பஞ்சகத்தை ஸாமாந்யரூபேணவும் விசேஷ ரூபேணவும் உணர்ந்து தெளிவுபெற்றபடியை அறிந்தறிந்து தேறித்தேறி என்றதனால் அருளிச்செய்தாராயிற்று.

இப்படி நீ அறிவிக்க அறிந்த யான் பரிபூர்ண ஜ்ஞாநஸ்வரூபனான உன்னை என்னுடைய நெஞ்சினுள்ளே மிக விசதமாக அநுஸந்தித்து, சாவது பிறப்பதாய்க் கொண்டு தடுமாறுகிற அறிவுகேடு தவிரப்பெற்றேன். இதில் த்ருப்தி பெற முடியுமோ? என்கிறார்.

மூன்றாமடியில் 'இடரும்' என்று பல பிரதிகளிலும் காண்கிறது; 'இடறும்' என்று வல்லினறகரமான பாடமே யுக்தம். "ஈமினெமக்கொருதுற்றென்று இடறுவர்" (4-1-7) என்று கீழேயும் அருளிச்செய்தார். "ப்ரஜை தெருவிலேயிடறி" என்ற ஸ்ரீவசநபூஷணமும் காண்க. இடறுதல்—கிலேசப்படுதல்.

நறுந்துழாயின் கண்ணியம்மா என்ற விடத்திற்கு ஈடு;—"இவ்வறிவு பிறக்கைக்கு அவனிட்ட பச்சையிருக்கிறபடி; வைத்த வளையத்தைக்காட்டி அவ்வடிவிலே குருகுலவாஸத்தைப்பண்ணுவித்து அறிவு பிறப்பித்தாயிற்று தனக்காக்கிக் கொண்டது."

ஆக இப்பாட்டால் ஆழ்வார் தாம் பெற்ற அளவைச் சொன்னாராயிற்று.

கண்டுகொண்டேன்கைகளார நின்திருப்பாதங்கள்மேல் *
எண்டிசையுமுள்ளபூக்கொண்டு ஏத்தியுகந்துகந்து *
தொண்டரோங்கள்பாடியாடச் சூழ்கடல்ஞாலத்துள்ளே *
வண்டுழாயின்கண்ணிவேந்தே! வந்திடகில்லாயே. (ஏ)

வண் துழாயின் கண்ணி வேந்தே!	அழகிய திருத்துழாய்மாலையையுடைய நாயனே!	ஏத்தி	தோத்திரஞ்செய்து பரிமாறி
கண்டு கொண்டு	(நெஞ்சினால் காண்கையன்றிக்கே) கண்ணாரக் கண்டு	உகந்து உகந்து	மிகவும் உகந்து
என் கைகள் ஆர	எனது கைகள் ஆவல் தீரும்படி	தொண்டரோங்கள்	அடியோமான நாங்கள்
நின் திரு பாதங்கள்மேல்	உனது திருவடிகளின் மீது	பாடி ஆட	பாடுவதாடுவதாம்படி
எண் திசையும் உள்ள பூ கொண்டு	எங்குமுள்ள புஷ்பங்களை சேகரித்துக்கொண்டு	கடல் சூழ் ஞாலத்துள்ளே	கடல்சூழ்ந்த இந்நிலவுலகுக்குள்ளே
		வந்திட கில்லாயே	(என்கண்முகப்பே) வந்து நிற்கமாட்டேனென்கிறாயே!

* * * [கண்டுகொண்டு.] பெற்ற உபகாரங்களைப் பேசினார் கீழ்ப்பாட்டில்; இனிப் பெறவேண்டுமதுதன்னைப் பேசுகிறார் இப்பாட்டில். இந்த ஸம்ஸாரநிலந்தன்னிலேயே உன்னைக்கண்டு அடியோங்கள் எல்லாவடிமைகளுஞ் செய்து உஜ்ஜீவிக்கும்படி அருள்புரியவேண்டு மத்தனையே அபேக்ஷிதமென்கிறார்.

காணப்பெறாமல் பட்டினி கிடக்கின்ற கண்கள் பட்டினி தீரும்படி காணவேணும். கைகளின் விடாய்தீர உன் திருவடிகளிலே எண்டிசையுமுள்ள பூக்களையுங் கொண்டு தூவவேணும்; அத்தாலே உன்னுடைய திருவுள்ளம் உகக்க, அவ்வுகப்புக்கண்டு அடியோங்கள் உகந்து, அவ்வுகப்புக்குப் போக்குவீடாகப் பாடவும் ஆடவும் வேணும். இப்பரிமாற்றங்களுக் கெல்லாம் ஏகாந்தமாகத் திருநாட்டிலே கொண்டுபோகிறேனென்னவொண்ணாது; இப்பேறு கடல்சூழ் ஞாலத்துள்ளே யாகவேணும். அங்கு நித்ய ஸூரிகளுக்கு ஸேவை ஸாதிக்கிறபடியே *தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையோடே வந்து காட்சி தந்தருளவேணும்; இப்படி எத்தனைநாள் பிரார்த்திதவிடத்திலும் வந்தருள்கின்றிலையே; நான் பெறாதது இத்தனையே யென்றாராயிற்று. .... (அ)

இடகிலேனொன்றட்டகில்லேன் ஐம்புலன்வெல்லகில்லேன் *
கடவனாகிக்காலந்தோறும் பூப்பறித்தேத்தகில்லேன் *
மடவன்னெஞ்சம்காதல்கூர வல்வினையேனயர்ப்பாய் *
தடவுகின்றேனெங்குக்காண்பன் சக்கரத்தண்ணலையே? (கூ)

		(இப்படி அகிஞ்சநனாயிருக்கச் செய்தேயும்)	
ஒன்று இடகிலேன்	(இரந்தார்க்கு) ஒரு பிச்சையும் இட்டறியேன்;	மடம் வல் நெஞ்சம்	மூர்க்கத்தனமும் கடினத்தன்மையும் பொருந்தின நெஞ்சானது
ஒன்று அட்ட கில்லேன்	(தாஹித்தவர்களுக்குச்) சிறிது (தண்ணீரும்) வார்த்தறியேன்;	காதல் கூர	ஆசை விஞ்சிவரப்பெற்று
ஐம் புலன்	இந்திரியங்களைந்தையும்	வல் வினையேன்	மஹாபாபியான நான்
வெல்ல கில்லேன்	பட்டிமேயாதபடி அடக்கியாண்டறியேன்;	அயர்ப்பு ஆய்	அவிவேகியாய்
கடவன் ஆகி	நியதியுடையவனாகி	சக்கரத்து அண்ணலே	சக்கரபாணியான எம்பெருமானை
காலம் தோறும்	உரிய காலங்களிலே	தடவுகின்றேன்	காணத்தேடுகின்றேன்;
பூ பறித்து ஏத்த கில்லேன்	புஷ்பங்களை ஸம்பாதித்து அர்ச்சித்துத் துதித்தறியேன்;	எங்கு காண்பன்	எங்கே காணக்கடவேன்?

* * * [இடகிலேன்.] எம்பெருமான்மேலே பழியிட்டுப் பயன் என்? அவனைக் காண்கைக்கு உபாயமாக பகவத்கீதை முதலான சாஸ்த்ரங்களிலே கூறப்பட்ட கர்மயோகாதிகளுள் ஒன்றிலும் அந்வயமில்லாதிருக்கின்ற நான் கிடந்து கூப்பிடுவதில் என்ன ப்ரயோஜனம்? என்று தம்மில்தாம் சொல்லிக்கொள்ளுகிறாராயிருக்கிறது இடகிலேன் என்றது. "ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி" என்கிறபடியே ஒருவர்க்கு ஒரு பிச்சையிட்டறியேன் என்றபடி. அட்டகில்லேன் என்றது தாஹித்து வந்தவர்களுக்குத் தண்ணீர் வார்த்தறியேன் என்றபடி. இங்ஙனே சில காரியங்கள் செய்திருந்தால் கர்மயோகத்திலே கணக்கடைக்கலாம்; அதற்கு வழியில்லையாயிற்று என்கை.

ஐம்புலன் வெல்லகில்லேன்=செவிவாய் கண் முதலிய இந்திரியங்கள் பட்டிமேயாதபடி நோக்கினேனாகில் ஞானயோகத்திலே சிறிது அடியிட்டதாகக் கணக்கிடலாம்; அதற்கும் வழியில்லையாயிற்று.

கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித்து ஏத்தகில்லேன் = திருவாராதனத்திற்கு யோக்யதையுள்ள காலங்களிலே புஷ்பங்கள் சேகரிக்குமறியேன், ஸமர்ப்பிக்குமறியேன். இவை செய்தால் பக்தியோகத்திலே சிறிது அந்வயமுள்ளதாகக் கணக்கிடலாம்; அது தனக்கும் வழியில்லையாயிற்று. **கடவனாகி** — ஒரு நியமத்தோடே கூடினவனாகி என்றபடி.

ஆகவிப்படி அகிஞ்சநனாயிருக்கச் செய்தேயும், ஏதோ நப்பாசையினால் அறிவுகெட்டவனாய்க்கொண்டு சக்கரபாணியான எம்பெருமானைத் தேடாநின்றேன்; காண வழி ஏது?

"சக்கரத்தண்ணலையே" என்றவிடத்து நம்பிள்ளையீடு;—"யசோதைப் பிராட்டி கையும் வெண்ணெயுமாகப் பிடித்துக்கொண்டாப்போலே கையும் *நெய்யாராழியுமாகப் பிடித்துக்கொள்ளவாயிற்று இவர் ஆசைப்படுகிறது" என்பதாம். .... (௯)

சக்கரத்தண்ணலேயென்று தாழ்ந்துகண்ணீர்ததும்ப *
பக்கம்நோக்கிநின்றலந்தேன் பாவியேன்காண்கின்றிலேன் *
மிக்கஞானமூர்த்தியாய வேதவிளக்கினை * என்
தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே. (௰)

சக்கரத்து அண்ணலே என்று	கையும் சக்கரமுமான அழகைக்காட்டி என்னையீடுபடுத்திக்கொண்டவனே! என்று சொல்லி
தாழ்ந்து	அநுபவம் கிடைக்கப்பெறுதக்லேசத்தையடைந்து
கண் நீர் ததும்ப	கண்ணீர்மல்க
பக்கம் நோக்கி நின்று	சுற்றும் பார்த்து நின்று
அலந்தேன்	தளர்ந்தவனான
பாவியேன்	பாவியானநான்
காண்கின்றிலேன்	காணப்பெறுகின்றிலேன்;

(காணக்கிடைக்காதவனை மறந்துவிடலாமென்று பார்த்தாலோ)

மிக்க ஞானம் மூர்த்தி ஆய	மிகுந்த ஞானஸ்வரூபனாய்
வேதம் விளக்கினை	வேதமாகிற தீபத்தாலே காணப்படுமவனான எம்பெருமானை
என் தக்க	எனக்கேற்ற
ஞானம் கண்களாலே	ஞானமாகிற கண்ணாலே
கண்டு தழுவுவனே	கண்டு தழுவிக்கொண்டேயிருக்கிறேனே!

[எப்படிமறக்கமுடியும்?]

* * * [சக்கரத்தண்ணலே.] நம்மிடத்தில் ஒரு கைம்முதலுமில்லாமையை நோக்கி எம்பெருமான் நமக்குக் காட்சி தர விரும்பாமலிருப்பதுயுக்தமே; அப்படி அவன் இருக்கும்போது அவனை நாம் மறந்து பிழைக்கலாமன்றோ; அப்படி மறக்கவும் முடியாதபடி அப்பெருமான் மாநஸஜ்ஞானத்திற்கு விஷயமாகிக்கொண்டிருக்கிறானே! இதற்கு என்னபண்ணுவேனென்று கிலேசப்படுகிறார்.

கையுந்திருவாழியுமான அழகைக்காட்டி என்னையீடுபடுத்திக்கொண்டவனே! என்று சொல்லித்தரைப்பட்டுக் கண்களில் நீர் பெருகப்பெற்றேன்; எந்தப் பக்கமாக வருகின்றானோவென்று பக்கந்தோறும் நோக்கினேன்; மஹாபாபியாகையாலே காணப்பெற்றிலேன். காணாவிட்டால் மறந்து பிழைக்கலாமே; நெஞ்சில் பிரகாசியாமலிருந்தாலன்றோ மறக்கலாம்; பரிபூர்ணமான ஞானத்தையே வடிவாகவுடையனாய் வேதவேத்யனாயிருக்கிற அப்பெருமானை மறவாமலிருப்பதற்குறுப்பாக எனக்குத்தகுந்தாப்போலே ஒரு ஜ்ஞான த்ருஷ்டியுண்டாகி அத்தாலே கண்டுதழுவும்படியாயேயுள்ளது; மறக்கவும் வழியில்லை, தரிக்கவும் வழியில்லை என்றாராயிற்று.

ஆழ்வார்க்கு ப்ரேமம், ஞானம் என்று இரண்டுண்டு; கண்ணாரக்காணப் பெறாமையாலே ப்ரேமம் க்லேசஹேதுவாயிற்று; மறந்து பிழைக்கவும் முடியாமையாலே ஞானமும் க்லேச ஹேதுவாயிற்று என்று தளருகிறபடி.

கண்டுதழுவுவனே என்னுமிடம் களித்துக்கூறுவதுபோலத் தோற்றினாலும் பிரகாணத்திற்குச் சேரவேண்டுகையாலே க்லேசோக்தியாகவே பூருவர்கள் வியாக்கியானித்தருளினார்கள்.

இரண்டாமடியில் "அலர்ந்தேன்" என்கிறபாடம் பிழையுடைத்து; 'அலந்தேன்' என்றேயிருக்கத்தக்கது. பெரியதிருமொழியில் "அலந்தேன் வந்தடைந்தேன்" என்றார் திருமங்கையாழ்வாரும். அலமந்தேன் என்றவாறு. (௧0)

தழுவிநின்றகாதல்தன்னால் தாமரைக்கண்ணன்தன்னை *
குழுவுமாடத்தென்குருகூர் மாறன்சடகோபன் * சொல்
வழுவிலாதவொண்தமிழ்கள் ஆயிரத்துளிப்பத்தும் *
தழுவப்பாடியாடவல்லார் வைகுந்தமேறுவரே. (கக)

தழுவி நின்ற	விட்டு நீங்காத
காதல் தன்னால்	(பகவதநுபவத்திலுள்ள) ஆசையினாலே,
தாமரை கண்ணன் தன்னை	செந்தாமரைக்கண்ணனான எம்பெருமானைக் குறித்து
குழுவு மாடம் தென் குருகூர்	திரண்ட மாடங்களையுடைய திருநகரிக்குத் தலைவரான
மாறன் சடகோபன்	ஆழ்வார்
சொல்	அருளிச்செய்த

வழு இலாத	குறையற்ற
ஒண் தமிழ்கள்	அழகிய தமிழ்ப்பாஷையினாலாகிய
ஆயிரத்துள்	ஆயிரம் பாட்டினுள்
இ பத்தும்	இத்திருவாய்மொழியை
தழுவ	கருத்தோடுகூட
பாடி	இசைபாடி.
ஆட வல்லார்	களித்துக் கூத்தாடவல்லவர்கள்
வைகுந்தம் ஏறுவர்	திருநாட்டில் ஏறப்பெறுவார்கள்.

* * * [தழுவிநின்ற.] இத்திருவாய்மொழியைக்கற்று ப்ரேம பரவசராமவர்கள் திருநாட்டிலேசென்று நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார்.

திருத்துழாய் பரிமளத்தோடு கூடவே அங்குரிக்குமாபோலே ஆழ்வார் "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்வித்து" என்றபடியே பகவத் விஷயமானகாதலோடுகூடவே அவதரித்தவராதலால் "தழுவிநின்ற காதல்தன்னால்" என்றார். * ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:." என்கிறபடியே எம்பெருமான் தனது செந்தாமரைக் கண்களால் கருவிலே கடாக்ஷித்தருளியே இந்தக் காதலை உண்டுபண்ணினனென்பது தோன்றத் தாமரைக்கண்ணன்தன்னை என்கிறார். "மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடும், மறப்பறவென்னுள்ளே மன்னினான்" என்றார் கீழும்.

குழுவுமாடத்தேன்குருகூர் என்றவிடத்திற்கு ஈடு;—"*ஸர்வஞ்ச குசலம் க்ருஹே* என்னுமாபோலே ஆழ்வார்க்கு ஆர்த்தி மிகமிக ஸர்வேச்வரன்வரவு தப்பாது என்று திருநகரி குடிநெருங்கிக் குளிர்ந்து தேறினபடி." என்பது.

இதன் கருத்து யாதெனில்;—பெருமாள் ராவணவதம் செய்தருளித் திருவயோத்யைக்கு மீண்டெழுந்தருளும்போது பரத்வாஜமஹர்ஷி பக்கலிலே போந்து தெண்டனிட்டு "அயோத்தியில் பரதன்முதலிய யாவரும் ஸௌக்கியமாக இருக்கிறார்களா? அவ்விடத்துச் செய்தி ஸ்வாமிக்கு ஏதேனும் தெரியுமோ?" என்றுகேட்க, அதற்கு விடைகூறுகின்ற முனிவர் "[illegible]—பங்கதிக்தஸ் து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே. பாதுகே தே புரஸ்க்ருத்ய ஸர்வஞ் ச குசலம் க்ருஹே." என்றார். *கங்குலும்பகலும் கண்துயிலறியாமே கண்ணநீர் கைகளாலிறைத்துச் சேற்றிலே அழுந்திக்கிடக்கிறான் பரதாழ்வான் என்று சொல்லிவிட்டு 'க்ருஹத்தில எல்லாரும் குசலந்தான்' என்றார் முனிவர். பரதாழ்வான் வாசாமகோசரமாகத் துடித்துக்கொண்டிருக்கும் போது "ஸர்வஞ்ச குசலம் க்ருஹே" என்று சொல்லக்கூடுமோ? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக நம்பிள்ளையருளிச்செய்கிற அர்த்தம் பரமபோக்யமானது: 'ஆர்த்தி பொறுக்கவொண்ணாதபடி மிகுந்தவாறே எம்பெருமான் சடக்கென வந்து முகங்காட்டியே தீருவன்' என்பதை நன்கு உணர்ந்தவர்களாகையாலே பரதாழ்வானுடைய அதிமாத்ரமான ஆர்த்தியைக் கண்டவர்கள் 'ஸ்ரீராமபிரான் அடுத்த க்ஷணத்தில் அவசியம் வந்தேதீருவன்' என்று திண்ணமாக நம்பி வெகுஸந்தோஷத்துடனே குழுமியிருந்தார்களாம். ஆனதுபற்றியே முனிவர் "ஸர்வஞ்ச குசலம் க்ருஹே" என்றார். அதுபோலவே இங்கும் ஆழ்வாருடைய ஆர்த்தியின் கனத்தைக்கண்ட குருகூர்வாழும் நல்லார்கள் 'இப்போது எம்பெருமான் வருகை தப்பாது' என்று தேறிக் குழுமியிருந்தார்களாம்: ஆகவே குழுவுமாடத்தேன்குருகூர் எனப்பட்டது—என்பது இன்சுவை மிக்கபொருள்.

மாறன்—ஸம்ஸாரிகளுக்கு மாறாக இருந்தவர்; அல்லது ஸம்ஸாரத்தை மாற்றினவர். இப்படிப்பட்ட ஆழ்வார் பகவத்குணங்களிலொன்றும் குறையாமே அருளிச்செய்த ஆயிரத்துள் இப்பத்தையும் ஸார்த்தமாகப் பாடியாடவல்லார் வைகுந்தமேறுவர் என்றாராயிற்று. ... ... (கக)

ஏழாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

[illegible]

எம்பெருமானை ஸாக்ஷாத்தாகக் கண்டு அநுபவிக்கப் பெறுமையாலே மிகவும் தளர்த்தியடைந்த ஆழ்வார் இன்ன இன்ன குணயுக்தனாக எம்பெருமானைச் சொல்லிக் கதறினாரென்கிறது.

1. ஆபத்பந்துத்வதீப்தம். * ஞாலமுண்டாய் ஞானமூர்த்தி * உலகத்தையெல்லாம் பிரளயங்கொள்ளுகையாகிற ஆபத்துவந்த காலத்திலே அவற்றைத் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தருளி அத்தாலே தேசுபொலிந்தவன்.

2. நிரவதிக மஹாநந்ததம். *கொள்ளமாளா வின்பவெள்ளம் கோதிலதந்திடும்* தன்னையநுபவித்தலாகிற எல்லையிலாத ஆனந்தத்தை யளிக்குமவன்.

3. க்ராந்தலோகம். *தாவி வையங்கொண்ட வெந்தாய்* எல்லாவுலகங்களையும் திருவடிகளாலே தாவி யளந்துகொண்டவன்.

4. துர்தர்சம் தேவதாநாம். *பேணி வானோர் காணமாட்டாப் பீடுடையப்பன்* பிரமன் முதலிய தேவர்களுக்கும் காணக்கிடைக்காதவன்.

5. அநுபதிம் பிதரம். *அப்பனே* எல்லார்க்கும் நிருபாதிக பிதாவாயிருப்பவன்.

6. ஸர்வபூதாந்தரஸ்தம். *ஆக்கையுள்ளு மாவியுள்ளுமல்ல புறத்தினுள்ளும் நீக்கமின்றி யெங்கும் நின்றாய்* சரீரம் முதலான ஸர்வ பூதங்களிலும் உள்ளே நிற்பவன்.

7. பூர்ணஜ்ஞாநைகமூர்த்திம். *நிறைந்த ஞானமூர்த்தியாயை* பரிபூர்ணஜ்ஞாநஸ்வரூபன்.

8. த்ருதசுபதுலஸிம். *வண்துழாயின் கண்ணி வேந்தே* அழகிய திருத்துழாய்மாலையை யணிந்தவன்.

9. சக்ரநாதம். *தடவுகின்றே னெங்குக் காண்பன் சக்கரத்தண்ணலேயே* திருவாழியாழ்வானோடு கூடிய நாதன்.

10. ச்ருதீநாம் விச்ராந்திஸ்தாநம் *வேத விளக்கினை* ஸர்வவேதங்களாகிற விளக்காலே காணக்கூடியவன். ஆக இப்படிப்பட்ட பல திருக்குணங்களையுடையனான பெருமானைப்பற்றிப் பேசினார் என்றதாயிற்று.

இத்திருவாய்மொழியில் ஆழ்வார் க்லேசப்பட்டபடியை மற்றொரு ச்லோகத்தாலே அருளிச்செய்கிறார்.

துச்சீலோ மாம்ஸசக்ஷுர் நிரவதிதுரிதோ வீதலஜ்ஜோ விலோல:
ப்ரேக்ஷாஹீநோऽந்யஸங்காத் க்ருதமபி லகயந் ஸ்ரீசமந்தர்ததாந:।
சர்மஜ்ஞாநாதிசூந்யோ நிருபதிவிஹிதாம் ஜ்ஞாநத்ருஷ்டிம் விநிக்நந்
ஏவம் ஸ்வதோஷாந் ப்ரக்யாப்ய பதிகுணரஸிக: தத்திதருக்ஷாம் சசக்ஷே॥

1. துச்சீல:. * சீலமில்லாச்சிறியன். * துஷ்டஸ்வபாவன்.

2. மாம்ஸசக்ஷு:. *என் கண் காணவந்து* என்றதிலே விவக்ஷிதம் தமது ஊனக்கண். மாம்ஸமயமான கண்ணையுடையேன் என்றபடி.

3. நிரவதிதுரித:. *ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன் கொல்* எல்லைகடந்த பாவங்களையுடையேன்.

4. வீதலஜ்ஜ:. *நாணமில்லாச் சிறுதகையேன்* வெட்கமில்லாதவன்.

5. விலோல: * இப்பொழுதே வந்திடாயென்று ஏழையேன் நோக்குவனே * சாபல்யமுடையேன்.

6. ப்ரேக்ஷாஹீந:. *நாக்குநீள்வன் ஞானமில்லை* அறிவுகேடன்.

7. அந்யஸங்காத் க்ருதமபி லகயந். *அறிந்தறிந்து தேறித்தேறி* இன்னமும் பெறவேண்டிய பேற்றைநோக்கி, பெற்றவளவுக்கு த்ருப்தியடைய மாட்டாமையை இந்தப்பாசுரம் வெளியிட்டதாகையாலே இங்ஙனம் அருளிச்செய்யப்பட்டது. (அந்யஸங்காத்—வேறொரு பேற்றில் நசையாலே, க்ருதம்அபி லகயந் ஏற்கனவே எம்பெருமானால் செய்யப்பட்டுத் தாம் பெற்றதான உபகாரத்தையும் லகுவாக எண்ணினவர் என்றபடி.

8. ஸ்ரீசம் அந்தர் ததாந:. எம்பெருமானை உள்ளுக்குள்ளே அநுபவித்துக்கொண்டிருப்பவர் என்றபடி. எட்டாவது பாசுரத்தில் "கண்டுகொண்டு பாடியாட—வந்திடகில்லாயே" என்று பிரார்த்தித்ததனால் வ்யஞ்ஜிதமான அர்த்தத்தை அருளிச்செய்தபடி. ஸ்ரீசம் என்கிற ஸ்தானத்தில் சீலம் என்று பாடம் காண்கிறது. அப்பாடத்தில் பொருட்பொருத்தம் அறிகின்றிலேம்.

9. சர்மஜ்ஞாநாதி சூந்ய:. * இடகிலே னொன்றட்டகில்லேன் * கர்மயோக ஜ்ஞானயோக பக்தி யோகங்களில்லாதவன்.

10. நிருபதி வஹதாம் ஜ்ஞாந த்ருஷ்டிம் விநிந்தந். * என் தக்க ஞானக்கண்களாலே கண்டு தழுவுவனே* காணப்பெறுவிட்டால் மறந்து பிழைக்கலாமே; அதுவுமொண்ணாதபடி எனக்கேற்றதொரு ஞானத்ருஷ்டியை உண்டுபண்ணி வைத்தானே! எங்ஙனே தரிக்கும்படி?' என்று வெறுத்த பாசுரமாகையாலே தம்முடைய ஞானத்ருஷ்டியை நிந்தித்துக்கொண்டாராகிறார்.

[ஏவம் ஸ்வதோஷாந் ப்ரக்யாப்ய] இவ்வண்ணமாக ஆழ்வார் தம்முடைய தோஷங்களைப் பாசுரந்தோறும் வெளியிட்டுக்கொண்டு, [பதிகுணரஸிக:] பகவத்குண ரஸிகராய் [தத்தித்ருக்ஷாம்] அவ்வெம்பெருமானைக் காண்கையிலுண்டான விருப்பத்தை [சசக்ஷே] அருளிச்செய்தாரென்கை.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

தச்சேஷஜாதஹரிநாமகதாப்ரஸங்காத்
ஸஞ்ஜாதஸம்மத ஸமுந்நதஸந்நிவேசோ ய:।
ஶ்ருவத்ஸவக்ஷஸமவாப்தக்ருதஸ்ப்ருஹோऽபூத்
ஶ்ருக்ரந்யஸ்ய வாம்ஹிதஸ்யாவத ஸவ்ருத்தே॥

(கருத்து) *தீப்பாரையாமினியில் "மாயப்போர்த் தேர்ப்பாகனார்" இத்யாதிதிருநாமங்களைத் தோழிமார் உரைக்கக் கேட்டதனால் அதுவேமருந்தாக உணர்த்திபெற்ற ஆழ்வார் பிரிவாற்றாமை மீதூரப்பெற்று எம்பெருமானுடைய ஆபத்ஸகத்வம் முதலான திருக்குணங்களை யெடுத்துரைத்து உரக்கக்கூப்பிட்டு, தம் கண்ணாலே காணலாம்படி வந்தருளவேணுமென்கிற விருப்பத்தை ஏழாந் திருவாய்மொழியினால் வெளியிட்டருளினாரென்றவாறு.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சீலமிகு கண்ணன் திருநாமத் தாலுணர்ந்து
மேலவன்றன் மேனிகண்டு மேவுதற்குச்—சால
வருந்தி யிரவும்பகலும் மாறாமல் கூப்பிட்
டிருந்தனனே தென்குருகூ ரேறு.

சீலம் மிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து	ஸுசீலனான கண்ணபிரானுடைய திருநாமத்தினால் மோஹம் தெளிந்து	சால வருந்தி	மிகவும் ஆயாஸப்பட்டு
மேல்	அங்ஙனம் தெளிவு பெற்ற பிறகு	இரவும் பகலும்	அஹோராத்ரமும்
அவன் தன் மேனி கண்டு மேவுதற்கு	அப்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தை நேரே கண்டு கிட்டியநுபவிப்பதற்கு	மாறாமல்	இடை விடாமல்
		கூப்பிட்டு இருந்தனன்	கூப்பிட்டுக் கொண்டிருந்தார்

* * * கீழ்த்திருவாய்மொழியில் மோஹித்து அறிவழிந்து கிடந்த ஆழ்வார், தோழிமார்கள் தாய்மாரை நோக்கிச்சொல்லிக்கொண்டிருந்த வார்த்தையடைவில் எம்பெருமானுடைய திருநாமங்கள் பலவற்றையும் ப்ரஸ்தாவித்ததனால்,) ப்ராஸங்கிகமாக அந்தத் திருநாமங்கள் செவியிற்படவே மோஹம் நீங்கித் தெளிவு பெற்றார்; பிரிவாற்றாமை அதிகமாக வருத்தத்தொடங்கியது. அதனால் அப்பெருமானுடைய திருமேனியை மாநஸஸாக்ஷாத்காரமாகவன்றிக்கே ப்ரத்யக்ஷமாகவே ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்கிற தமது விருப்பத்தை வெளியிட்டு இடைவிடாது கூவிக்கொண்டிருந்தார் * சீலமில்லாச்சிறியனில் என்கிறது. .... (௩எ)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நான்காம்பத்து.

எட்டாந் திருவாய்மொழி—ஏறாளுமிறையோனும்.

உரையவதாரிகை:—கேட்டாரெல்லாரும் நீராய்படியாகக் கீழ்த்திருவாய்மொழியிலே ஆழ்வார் கூப்பிடச் செய்தேயும் எம்பெருமான் வந்து முகங்காட்டிற்றிலன். அதனால் எம்பெருமான் தம்மை வேண்டாவென்று வெறுத்திருப்பதாக நிச்சயித்தார். அவனுடைய வெறுப்புக்கு இலக்கான இந்த ஆத்மாவும் ஆத்மீயங்களும் நமக்கு ஏதுக்கு? அவனுக்குவேண்டாதவை நமக்குத்தான் வேணுமோவென்று ஆத்மாத்மீயங்களையெல்லாம் உபேக்ஷிக்கிறார் இத்திருவாய்மொழியில்.

ஆழ்வார் ஜநககுலஸுந்தரியோடே யொத்திருப்பர் என்றாயிற்று நம் முதலிகள் அறுதியிட்டிருக்கும்படி. அப்பிராட்டி அசோகவனத்திலிருந்த போது—* நஹி மே ஜீவிதேநார்த்த: நைவார்த்தைர் ந ச பூஷணை: | வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம்* ந ஹி மே ஜீவிதேநார்த்த: நைவார்த்தைர் ந ச பூஷணை:, வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம்." என்று ஆத்மாத்மீயங்களையெல்லாம் வெறுத்தாள். பெருமாள் விரும்பாதே ராக்ஷஸிகள் நடுவே சிறையிருக்கின்றவெனக்கு உயிர் உடைமை முதலியவற்றால் என்னபலன்? என்றாள். அந்த நிலைமைதானே இப்போது ஆழ்வார்க்குமுண்டாயது.

இத்திருவாய்மொழியைப் பரிபூர்ணமாகத் தமது ஸ்தோத்ரரத்நத்தில்—"நதேஹம் நப்ராணாந் நசஸுகமசேஷாபிலஷிதம் நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத் | பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே, யாது சததா விநாசம் தத்ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்" ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத். பஹிர்ப்பூதம் நாத! க்ஷணமபி ஸஹே, யாது சததா விநாசம் தத் ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம்." என்றருளிச்செய்த ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. (இதன் கருத்து:—மதுஸூதநனே! திருமுன்பே ஸத்யமாக ஒரு விண்ணப்பம் செய்கிறேன்; கேட்டருளவேணும்: அஃது என்னென்னில்; "சரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" என்கிறபடியே தர்மா

நுஷ்டானங்களுக்கு முதல் ஸாதனமான சரீரமும் அதற்குத் தாரகங்களான ப்ராணன்களும், ப்ராணிகளெல்லாரும் மிகவிரும்பும் ஸுகமும், இவையெல்லாவற்றிற்கும் ஆச்ரயமாக நிற்கும் ஆத்மாவும், மற்றும் புத்ரமித்ரகளத்ராதிகள் ஏதுவாகிலும் உன்னுடைய சேஷத்வத்திற்கு உபயுக்தமாகில் வேண்டும்; அதற்குப் புறம்பாகில் வேண்டா; இவையெல்லாம் உருமாய்ந்து போகட்டும், இது கழுத்துமேலே சொல்லுகிற வார்த்தையன்று; இது பொய்சொன்னதாகில் உன்னிடத்தில் மது என்னும் அசுரன் பட்டபாடு படுவேனத்தனை—என்பதாம்.

பகவத்கைங்கர்யத்திற்கு உறுப்பல்லாதவை த்யாஜ்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாகும்.

ஆண்டாளும் "கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டு அவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றருளிச்செய்தது இங்கே நினைக்கத்தகும்.

இந்தத் திருவாய்மொழி ஆழ்வார் தாமான தன்மையிலேநின்று அருளிச்செய்வதன்று; நாயகீ ஸமாதியாலே அருளிச்செய்ததென்னுமிடம் "மணிமாமை குறைவிலமே" "மேகலையால் குறைவிலமே" "வரிவளையால் குறைவிலமே" என்பவற்றால் விளங்கும். திருமங்கையாழ்வாரும் பெரிய திருமடலில் "கன்னவிலுங் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின் நன்னறுவாசம் மற்றாரானுமெய்தாமே மன்னும் வறுநிலத்து வாளாங்குதிர்ந்ததுபோல், என்னுடைய பெண்மையும் என்னலனும் என்முலையும், மன்னுமலர் மங்கை மைந்தன், கணபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம் தோயாவேல், என்னிவைதான் வாளா வெனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக்காப்பதோர் மன்னுமருந்தறிவீரில்லையே" என்றருளிச்செய்தது காண்க.

ஏறாளுமிறையோனும் திசைமுகனும்திருமகளும் *
கூறாளும்தனியுடம்பன் குலங்குலமாஅசுரர்களை *
நீறாகும்படியாக நிருமித்துப்படைதொட்ட *
மாறாளன்கவராத மணிமாமைகுறைவிலமே. (க)

ஏறு ஆளும் இறையோனும்	விருஷபவாஹனனான சிவபிரானும்
திசைமுகனும்	நான்முகனும்
திரு மகளும்	பெரிய பிராட்டியாரும்
கூறு ஆளும்	'இன்ன இடம் இன்னாருடையது' என்று பங்கிட்டுக் கொண்டு வஹிக்கப்பெற்ற
தனி உடம்பன்	விலக்ஷணமான திருமேனியையுடையவனும்,
அசுரர்களை	அசுரர்களை
குலம் குலம் ஆ	கூட்டங்கூட்டமாக
நீறு ஆகும்படி ஆக	சுடுநீறாகி யொழியும் படியாக
நிருமித்து	ஸங்கல்பித்து (அவ்வளவேயன்றிக்கே)
படை தொட்ட	ஆயுதங்கொண்டும் காரியஞ்செய்த
மாறு ஆளன்	எதிர்த்தலையுடையனுமான எம்பெருமான்
கவராத	விரும்பாத
மணி மாமை	அழகிய நிறத்தில்
குறைவு இலம்	அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [ஏறாளுமிறையோனும்] ஸௌசீல்யமே வடிவெடுத்த எம்பெருமான் விரும்பாத அழகிய நிறம் எனக்கு ஏதுக்கு? என்கிறாள். ஆரம்பிக்கும்போதே "ஏறாளுமிறையோன் கூறாளுந் தனியுடம்பன்" என்றது ஒருதரமஸ தெய்வத்துக்கு எளிதான திருமேனி எனக்கு அரிதாவதே! என்ற வருத்தத்தைக் காட்டுமென்க. "வேதாத்மா விஹகேச்வர:" என்கிறபடியே வேதஸ்வரூபியான பக்ஷிராஜனை வாஹநமாகக்கொண்ட எம்பெருமான் முன்னே மூட ஜந்துவானவொரு எருதை வாஹனமாகக்கொண்டு திரிகின்ற உருத்திரனும், நான்முகனும், ஸ்ரீமஹாலக்ஷ்மியும் ஆகிய இவர்கள் கூறிட்டு ஆளும்படி அத்விதீயமான திருமேனி படைத்த பெருமான் என்றது—அவனுடைய ஸௌசீல்யமென்னும் மஹாகுணத்தை யநுபவித்துப் பேசினபடி. "சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர்திருவாகம் எம்மாவீரும்" என்றார் முதற்பத்திலும். அங்கு உரைத்ததெல்லாம் இங்கும் அறியத்தக்கது.

குலங்குலமா அசுரர்களை நீறாகும்படியாக நிருமித்துப் படைதொட்ட—சீலகுணம் சொல்லிற்று கீழ்; வீர்யகுணம் சொல்லுகிறது இதனால். தான்நினைத்தால் விரோதிவர்க்கங்களைக் கிழங்கறக்களைந்து தொலைப்பதில் ஓர் அருமையுண்டோ? சக்தியுக்தன் உபேக்ஷித்தால் உயிர்தரிக்க வழியுண்டோவென்கை.

நிருமித்து என்றது—ஸங்கல்பித்து என்றபடி. ஜகத்ஸ்ருஷ்டிமுதலிய அரிய பெரிய தொழில்களையெல்லாம் ஸங்கல்ப மாத்ரத்தாலே செய்து போருகின்றவன் பாகவதவிரோதிகளான அசுரர்களை ஸங்கல்ப மாத்ரத்தாலே தொலைத்திடாமல் படைதொட்டு நிரூக்குகின்றனனும்; இஃது ஏன்? என்னில்; "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச்செய்வர்" என்ற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தி அறியத்தக்கது. இங்கே மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு:— "ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன், தன்னையழியமாறி இதரஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்யராவணாதி நிரஸநரூபங்களான அதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோபாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலேயென்று ஆப்ததமரான நஞ்சீயரருளிச் செய்வரென்கை."

மாறாளன்—ஆச்ரிதர்களின் விரோதிகளைத் தன்விரோதிகளாகக்கொண்டு அவர்களோடு மாறுபட்டிருப்பவன் என்பது பரமதாற்பரியம்.

கவராதமணிமாமை=அப்படிப்பட்ட பெருமான் ஓடிவந்து மேல்விழுந்தாலன்றோ இவ்வழகியநிறம் எனக்கு உத்தேச்யமாவது; அல்லாதபோது இது எனக்கு ஹேயமேயாகும். இந்த நிறமில்லையென்று நான் அழுகிறேனோவென்கை.

குறைவு என்பதற்கு லக்ஷணையால் அபேக்ஷிதம் என்று பொருளாகும். குறைவிலம்—அபேக்ஷையுடையோமல்லோம்; வேண்டியதில்லை என்றவாறு. (க)

மணிமாமைகுறைவில்லா மலர்மாதருறைமார்பன் *
அணிமானத்தடவரைத்தோள் அடலாழித்தடக்கையன் *
பணிமானம்பிழையாமே அடியேனைப்பணிகொண்ட *
மணிமாயன்கவராத மடநெஞ்சால்குறைவிலமே. (உ)

மணி மாமை குறைவு இல்லா	அழகிய நிறம்நிரம்பியிருக்கப்பெற்ற	அடல் ஆழி தட கையன்	தீக்ஷ்ணமான திருவாழியைப் பெரியதிருக்கையிலேயுடையவனும்
மலர் மாதர்	பூமகளான பெரியபிராட்டியார்	பணி மானம் பிழையாமே	கைங்கர்ய வ்ருத்திகள் தப்பாதபடி
உறை	நித்யவாஸம் பண்ணப்பெற்ற	அடியேனை	அடியேனை
மார்பன்	திருமார்பையுடையவனும்	பணி கொண்ட	கிங்கரனாக ஆக்கிக்கொண்டவனும்
அணி மானம் தட வரை தோள்	அழகியதாய்ப் பெருத்து உருண்டு மலைபோன்றுள்ள திருத்தோள்களையுடையவனும்	மணி மாயன்	நீலமணிவண்ணனுமான எம்பெருமான்
		கவராத	விரும்பாத
		மட நெஞ்சால் குறைவு இலம்	விதேயமான நெஞ்சில் அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [மணிமாமை] பிராட்டியோடே கூடியிருக்குமழகைக்காட்டி என்னையடிமைகொண்டவன் விரும்பாத நெஞ்சால் ஒரு காரியமில்லையென்கிறாள். குற்றங்களையும் நற்றமாக உபபாதித்து அருள்புரிவிக்கின்ற பெரியபிராட்டியாரும் கூடவிருக்கச்செய்தே என்னை உபேக்ஷித்திருக்குமாகில் என்னுடைமையால் எனக்குத்தான் ப்ரயோஜனம் என்? என்கிறாள். "மணிமாமை குறைவிலமே" என்று நான் வெறுத்ததுபோலே வெறுக்கவேண்டாமல் நித்யஸம்ச்லேஷம் பெற்றிருக்கிறவளும், புஷ்பத்தில் பரிமளத்தையே வடிவாக வகுத்தாற்போலே ஸௌகுமார்யத்தில் சிறந்திருக்கிறவளுமான பெரியபிராட்டி நித்யவாஸம் பண்ணப்பெற்ற திருமார்பையுடையவனும், அழகிய பருத்த திருத்தோள்களையுடையவனும், பிராட்டியும் தானுமான சேர்த்திக்கு அஸ்தாநே பயசங்கை பண்ணி மங்களாசாஸநபரனாயிருக்கும் திருவாழியாழ்வானைக் கையிலேந்தினவனும், இளையபெருமாளை அடிமைகொண்டாற்போலே ஏற்கனவே என்னையுமடிமைகொண்டவனும், நீலமணிபோன்றழகிய வடிவுபடைத்தவனுமான பெருமான் விரும்பாத நெஞ்சு எனக்கும்வேண்டா.

பணிமானம் பிழையாமே என்றவிடத்து ஒரு ஐதிஹ்யம்:--எம்பெருமானார் மடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்யாநிற்க, அவர்களுக்குத் தீர்த்தம் பரிமாறுகின்ற கிடாம்பியாச்சான் நேரேநின்று பரிமாறாமல் ஒரு பக்கமாயிருந்து பரிமாறினாராம்; அதைக் கடாக்ஷித்த எம்பெருமானார் ஓடிவந்து முதுகிலே யடித்து 'உடோ, இப்படியா பரிமாறுவது? நேரேநின்றன்றோ பரிமாறவேணும்' என்று சிக்ஷிக்க, அப்போது ஆச்சான் "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்டருளிற்றே!" என்று உகந்தாராம்.

ஆழ்வார் தாம் செய்துபோருகிற வாசிககைங்கரியத்தைப்பற்ற "பணிமானம் பிழையாமே யடியேனைப்பணிகொண்ட" என்கிறாரென்றுணர்க.

"கவராத மடநெஞ்சால் குறைவிலமே" என்றவிடத்தில் நஞ்சீயர் அருளிச்செய்வராம்;-*கோவைவாயாளென்கிற திருவாய்மொழியில் 'பூசுஞ்சாந்து என்னெஞ்சமே' என்னும்படி அப்போது அப்படிவிரும்பினவன் இன்று இப்படி உபேக்ஷிக்கையாலே, நாயகன் தாமதித்துவந்தானென்று அவன் முன்னிலையில் சாந்தைப் பரணியோடே உடைப்பாரைப்போலே என்னெஞ்சு எனக்கு வேண்டாவென்கிறாள் என்று. .... (உ)

மடநெஞ்சால்குறைவில்லா மகள்தாய்செய்தொருபேய்ச்சி *
விடநஞ்சமுலைசுவைத்த மிகுஞானச்சிறுகுழவி *
படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோள்பரம்புருடன் *
நெடுமாயன்கவராத நிறைவினால்குறைவிலமே. (ரு)

மட நெஞ்சால் குறைவு இல்லா	நெஞ்சில் நெகிழ்ச்சியைப் பரிபூர்ணமாகக்கொண்ட	படம் நாகம் அணை கிடந்த	படமெடுத்த நாகமாகிற படுக்கையிலே சயனிப்பவனும்
தாய் மகள் செய்த	யசோதையாகிய தாயாகத்தன்னையாக்கிக்கொண்ட	பரு வரை தோள்	பெரியமலைபோலே வளர்ந்ததோள்களையுடையவனும்
ஒரு பேய்ச்சி	பூதனையென்கிறவொரு பேய்ச்சியினுடைய	பரம்புருடன்	புருஷோத்தமனாக ப்ரஸித்திபெற்றவனும்
விடம் நஞ்சம்	கொடியவிஷம் பொருந்திய	நெடு மாயன்	எல்லைகடந்த ஆச்சர்ய குணசேஷ்டிதங்களையுடையவனுமான எம்பெருமான்
முலை	முலையை		
சுவைத்த	உறிஞ்சியுண்டவனும்	கவராத	விரும்பாத
மிகு ஞானம் சிறு குழவி	மிக்க ஞானத்தையுடைய சிறுகுழந்தையானவனும்	நிறைவினால் குறைவு இலம்	அடக்கத்தில் அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [மடநெஞ்சால்.] கண்ணபிரான் விரும்பாத அடக்கம் எனக்கு வேண்டாவென்கிறாள். பூதனையென்னும் ராக்ஷஸி கம்ஸனேவுதலால் நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்குவந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த ஸ்ரீக்ருஷ்ண சிசுவையெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையை உண்ணக்கொடுத்துக் கொல்லமுயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைமுடித்திட்டனன் என்கிறவரலாறு முன்னடிகட்கு அறியத்தக்கது.

ஆஸுரப்ராக்ருதியான பூதனைக்கு "மடநெஞ்சால் குறைவில்லா" என்று விசேஷணமிட்டது ஏன்? என்னில்; அப்பூதனை தன்னுருவத்தை மறைத்து யசோதைப் பிராட்டிபோல் பாவனைகாட்டி வந்தாளாகையாலே தாய்போலப் பரிவை ஏறிட்டுக்கொண்டு வந்தாளென்றவாறு. "பெற்றதாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை வற்றவாங்கியுண்டவாயான்" என்றார் திருமங்கை

யாழ்வாரும், பூதத்தாழ்வாரும் "மகனாகக்கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை, அகனாரவுண்பனென்றுண்டு, மகனைத்தாய் தேறுதவண்ணம் திருத்தினாய்" என்றார். (இதன் கருத்து:—நஞ்சு தீற்றிய முலையைக்கொடுத்து உன்னைக் கொல்லவந்த பேய்ச்சியானவள் மெய்யே தாய்போன்று பரிவுகாட்டி உன்னை வாரியெடுத்தணைத்து முலைகொடுத்தாள்; நீயும் மெய்யே குழந்தையாகவே பாவனை காட்டி அம்முலையைச் சுவைத்துண்பவன்போல அவளுயிரையே உறிஞ்சியுண்டாய். அதுமுதலாக உனது மெய்த்தாயான யசோதைப் பிராட்டிக்கு உன்னிடத்தில் நம்பிக்கையுண்டாக இடமில்லாமலே போயிற்று; 'இவனை நாம் சிறுகுழந்தையென்று நம்பவேகூடாது' என்று எப்போதும் துணுக்குத்துணுக்கென்று அவள் அஞ்சியிருக்கும் வண்ணமே செய்துவிட்டாய் என்றவாறு.)

செய்தொரு என்றவிடத்தில் தொகுத்தல் விகாரம்; 'செய்தவொரு' எனவிரியும்.

விடநஞ்ச முலைசுவைத்த=விஷம் என்றும் நஞ்சம் என்றும் பர்யாயமாயிருக்க, இரண்டுசொற்களையும் சேர்த்துச் சொன்னதனால் விஷத்தின் கொடுமை காட்டப்பட்டதாகும். நாட்டில் விஷங்களெல்லாம் அம்ருதம் என்னலாம்படியான விஷம் என்பர்.

மிகுஞானச் சிறுகுழவி = பாகவதர்கள் சிறுமாமனிசர் என்று பெயர் பெற்றதுபோலப் பகவானும் மிகுஞானச் சிறுகுழவி யென்று பெயர் பெற்றானாயிற்று. ஸர்வஜ்ஞசிசு என்றபடி. வயிறாரப் பாலுண்டபடியாலே குழந்தைக்குப் படுக்கை தேட்டமாயிற்று; படுத்துக்கொண்டது என்கிறார்போலும் படநாகத்தணைக்கிடந்த என்பதனால்.

நிறைவினல் குறைவிலம் = நிறைவு என்பது பூர்த்தி; இங்கு ஸ்த்ரீத்வ பூர்த்தியைச் சொல்லுகிறது. அதாவது அடக்கம். எம்பெருமானாகவே வந்து திருவுள்ளம் பற்றுவனென்று எண்ணி இதுவரை அடக்கத்தோடிருந்தேன்; இனி அதை விட்டுத்தொலைக்கவேண்டியதேபோலும் என்றவாறு. (௫)

நிறையினல்குறைவில்லா நெடும்பணைத்தோள்மடப்பின்னை *
பொறையினல்முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த *
கறையினார்துவருடுக்கை கடையாவின்கழிகோல்கை *
சறையினாகவராத தளிர்நிறத்தால்குறைவிலமே. (௬)

நிறைவினல் குறைவு இல்லா	குறையற்ற ஸ்த்ரீத்வ பூர்த்தியையுடையவளும்
நெடு பணை தோள்	நீண்டு பணைத்த தோள்களையுடையவளும்
மடம்	அறிந்தும் அறியாமையாகிற மடப்பம்பொருந்தியவளுமான
பின்னை	நப்பின்னையினுடைய
முலை அணைவான்	திருமுலைத்தடத்தோடு சேருகைக்காக [மணப்பதற்காக]
பொறையினல்	வருத்தங்களைப்பொறுத்திருந்து
பொரு விடை எழ் அடர்த்து உகந்த	கொடிய விருஷபங்களேழையும் நெரித்து மகிழ்ந்தவனும்

கறையின் ஆர் துவர் உடுக்கை	(நாவல்முதலிய காட்டுப் பழங்களின்) கறை மிகுந்த துவர்நிறமான வஸ்த்ரத்தையும்
கடையா	பால்கறக்கும் மூங்கிற் குழாயையும்
கழிகோல்	வீசுகோலையும்
கை	கையிலேஉடையவனும்
சறையினார்	தன்உடம்பைப்பேணாதவனுமான எம்பெருமான்
கவராத	விரும்பாத
தளிர்நிறத்தால் குறைவு இலம்	தளிர்போலே செவ்விதான நிறத்தில் விருப்பமுடையோமல்லோம்.

* * * [நிறைவினல்.] நப்பின்னைப் பிராட்டியைப் பெறுதற்காக எருதேழடர்த்த பெருமான் விரும்பாத செவ்வியநிறம் எனக்கு ஏதுக்கென்கிறாள். கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள்தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யார்க்கும் அடங்காத அஸுராவேசம்பெற்ற எழு எருதுகளையும் கண்ணபிரான் எழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அவளை மணஞ்செய்து கொண்டானென்றவரலாறு முன்னடிகட்கு அறியத்தக்கது.

பொறையினல் = நப்பின்னையை எப்படியாவது பெற்றுவிடவேணுமென்கிற ஆசையினால், பொறுக்கவொண்ணாத வ்யஸநங்களையும் பொறுத்துக்கொண்டமை தெரிவித்தவாறு. "எருதுகளின் கொம்பாலும் குளம்பாலும் நெருக்குண்டவித்தை அவள் முலையாலே பிறந்த விமர்த்தமாக நினைத்திருந்தான்" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியின் அழகு காண்க.

பெரிய திருமொழியில் "மின்னினன்ன நுண்மருங்குல் வேயேய்தடந்தோள் மெல்லியற்கா, மன்னு சினத்த மழவிடைகள் ஏழன்றடர்த்த மாலதிடம்" என்றவிடத்து வியாக்யானத்தில்—"கருமாறிபாய்ந்தும் அணையவேண்டுமாய்த்து நப்பின்னைப் பிராட்டியின் வடிவழகு" என்றருளிச் செய்ததும் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. (கருமாறிபாய்த லென்பது, கச்சிமாநகரில் காமாட்சியம்மனாலயத்தில் குளத்திலே நாட்டப்பட்டிருந்த மிகக்கூர்மையான இரண்டு சூலங்களினிடையே உயரத்தில் நின்றும் குதிப்பதாம். பண்டைக்காலத்தில் ஏதேனும் இஷ்டஸித்தி பெறவேண்டுவார் இவ்வருந்தொழில் செய்வது வழக்கமாம். குடல் கிழிந்து சாகவேண்டும்படியான இவ்வருந்தொழிலை வெகு சாதுரியமாகச்செய்து அபாயமொன்றுமின்றியே உயிர்தப்பி இஷ்டஸித்தி பெறுமவர்கள் மிகச் சிலரேயாவர். மிகக்கடினமான இக்காரியத்திற்குத் துணிந்தார்களென்றால் இதனால், அவர்கள் பெறவிரும்பிய வஸ்து மிகச்சிறந்ததென்பது விளங்குமன்றோ. அப்படியே நப்பின்னை திருமேனியின் சிறப்பை விளக்கவந்ததாகும் இவ்வாக்கியம்.

கறையினார் துவருடுக்கை இத்யாதி. "ஆநிரைமேய்க்க நீ போதி அருமருந்தாவதறியாய், கானகமெல்லாந் திரிந்து உன் கரிய திருமேனிவாட" என்கிறபடியே ஸ்ரீகோபாலக்ருஷ்ணன் காடுகளிலே திரியுங்கால் கொள்ளுங் கோலம்

இவ்வடியில் வெகு அழகாக வருணிக்கப்படுகிறது. பலபல காட்டுப்பழங்களைப் பறித்துத் துணியிலே கட்டிக்கொண்டு தின்பதனால் கறையினார்துவருடுக்கை எனப்பட்டது. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"இடையர் காட்டுக்குப் போம்போது முள்கிழியாமைக்கு உடுக்கும் உடைத் தோலைச்சொல்லுகிறது. ......காட்டில் பழங்களைப் பறித்திடுகையாலே கறைபிடிக்கிருக்கும்; அத்தாலே கறைமிக்க துவராயிற்று உடுக்கை."

கடையாவின் கழிகோல் = கடையாவோடு சேர்ந்த கழிகோல் என்றபடியாய், கடையாவும் கழிகோலும் என்றதாம். பால்கறப்பதற்குக் கொள்ளும் மூங்கிற் குழாய்ப்பாத்திரம் கடையா எனப்பெயர் பெறும். கழிகோல்—ஸ்வாதீனப்படாத பசுக்களை நியமிப்பதற்காக வைத்துக்கொள்ளும் கோல். அன்றிக்கே, முன்னணைக்கன்று பசுக்களோடே போனால் முலையுண்ணுமைக்கு, கொறுக்கோலென்று அதன் மூஞ்சியிலே கட்டிவிடுவர்கள்; அதைச்சொன்னதாகவுமாம். தங்களுக்கென்று ஓர் இருப்பிடமில்லாத ஸந்நியாஸிகள் தங்களுடைய பிக்ஷாபாத்ரமான சிக்கம் முதலானவற்றைக் கையோடே கொண்டிருக்குமாபோலே இடைச்சாதியில் மெய்ப்பாடுடைய கண்ணபிரான் கடையாவும் கழிகோலும் கையிலேகொண்டு திரிவானாயிற்று.

சறையினார் = இடையர்கள் அரையிலே கட்டிக்கொள்வதொருமணியுண்டு; சறைமணியென்று அதற்குப்பெயர். "இடையர் அரையிலே கோத்துக் கட்டி முன்னே போகாநின்றால் அந்த த்வநிவழியே பசுக்களெல்லாம் ஓடிவரும்படியாயிருப்பதொன்று." என்கிற ஈட்டு ஸ்ரீஸூக்தியும் காண்க. அந்த மணியையுடையவன் என்கை. அன்றிக்கே, சறை என்று தாழ்வு; இடக்கை வலக்கையறியப் பெறுமே தாழ்ந்த இடைக்குலத்திலே பிறந்தவன் என்றதாகவுமாம். அன்றிக்கே, சறையென்று சரும்பியிருக்கையாய், உடம்பைப் பேணுதிருக்கிறவன் என்றதாகவுமாம். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"அல்லாத இடையர் விஷுவ அயந ஸங்க்ரமணங்களுக்கு உடம்பிருக்கத் தலை குளித்தல், உடம்பிலே துளிநீர் ஏறிட்டுக்கொள்ளுதல் செய்வர்களாகில், இவனுக்கு அது செய்யவும் அவஸரமற்றிருக்குமாயிற்று பசுக்களின் பின்னே திரிகையாலே. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்துக்காகத் தன்னைப் பேணாத அவ்வடிவை அணைக்கைக்காயிற்று இவள் ஆசைப்படுகிறது."

ஸ்ரீராமாயண—அயோத்யா காண்டத்தில், பட்டாபிஷேகார்த்தமான சில நியமங்களோடேகூடியிருக்கின்ற ஸ்ரீராமபிரானைக் குறித்துப் பிராட்டியருளிச்செய்ததான "தீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் வராஜிநதரம் ஶுசிம்| குரங்கஶ்ருங்கபாணிம் ச பஶ்யந்தீ த்வா பஜாம்யஹம்|| = தீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் வராஜிநதரம் சுசிம், குரங்கச்ருங்கபாணிஞ் ச பச்யந்தீ த்வா பஜாம்யஹம்." என்கிற ச்லோகத்தை நம்பிள்ளை இங்கு ஈட்டில் வியாக்கியானித்தருளுமழகு வாசாமகோசரம். ரஸிகர்கள் விரும்பி நோக்கத்தக்கது. .... (௪).

தளிர்நிறத்தால்குறைவில்லாத் தனிச்சிறையில்விளப்புற்ற *
கிளிமொழியாள்காரணமாக் கிளரரக்கன்நகரெரித்த *
களிமலர்த்துழாயலங்கல் கமழ்முடியன்கடல்ஞாலத்து *
அளிமிக்கான்கவராத அறிவினால்குறைவிலமே. (ரு)

தளிர் நிறத்தால் குறைவு இல்லா	தளிர்போன்றழகிய நிறத்தால் பரிபூர்ணையாய்	களி மலர் துழாய் அலங்கல் கமழ் முடியன்	தேனையுடைய மலரோடு கூடின திருத்துழாய் மாலையாலே பரிமளிக்கின்ற திருமுடியையுடையவனும்
தனி சிறையில் விளப்புற்ற	தனிச்சிறையிருந்ததனால் ப்ரஸித்தி பெற்றவளாய்	கடல் ஞாலத்து	கடல்சூழ்ந்த மண்ணுலகில்
கிளி மொழியாள் காரணம் ஆ	கிளியினதுபோன்ற இனியமொழியையுடையளான ஸீதா பிராட்டிநிமித்தமாக	அளி மிக்கான்	மிகுந்த அன்பையுடையவனுமான எம்பெருமான்
கிளர் அரக்கன் நகர் எரித்த	செருக்கனான இராவணனுடைய பட்டணத்தை நெருப்புக்கு இரையாக்கினவனும்	கவராத	விரும்பாத
		அறிவினால் குறைவு இலம்	அறிவில் அபேக்ஷையுடையோமல்லோம்.

* * * [தளிர்நிறத்தால்.] இராமபிரானுடைய சேஷத்வத்திற்கு உறுப்பல்லாத அறிவு எனக்கு வேண்டாவென்கிறாள். ஸீதாபிராட்டியைக் குறிக்கவேண்டுமிவ்விடத்தில் தனிச்சிறையில் விளப்புற்ற என்றருளிச்செய்தது அப்பிராட்டியினுடைய ஒப்புயர்வற்ற பிரபாவாதிஶயத்தை வெளியிடுதற்கேயாம். தேவதேவ திவ்யமஹிஷியான தன் பெருமையையும் சிறையிருப்பின் தண்மையையும் பாராதே, தேவஸ்த்ரீகளின் சிறையை விடுவிக்கைக்காகப் பிராட்டி தான் சிறையிருந்தது கருணையின் மிகுதியாலாகுமத்தனை. குழந்தை கிணற்றில் விழுந்தால் உடன் குதித்தெடுக்கும் தாயைப்போலே, இச்சேதநர் விழுந்த ஸம்ஸாரத்திலே தானுமொக்க வந்து பிறந்து இவர்கள் பட்டதையெல்லாம் தானும் பட்டு ரக்ஷித்தருளுகையாலே நிருபாதிகமான மாத்ருத்வமும் வாத்ஸல்யமும் இச்சிறையிருப்பினால் விளங்குமென்பர். ஆச்ரிதரான தேவர்களுடைய ஸ்த்ரீகளின் சிறையை விடுவிக்கைக்காகத் தன் அநுக்ரஹத்தாலே தானேவலியச்செய்துகொண்டதாகையாலே பிராட்டிக்குச் சிறையிருப்பு ஏற்றத்திற்கு உறுப்பாமித்தனை. உலகத்தவர்கட்குக் கர்மநிபந்தனமாக நேர்கின்ற சிறையிருப்பே ஹேயமாகும். பிள்ளை லோகாசார்யரும் ஸ்ரீவசநபூஷணத்தில் "இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது" என்றருளிச்செய்தது இவ்வாழ்வார் பாசுரத்தை அடியொற்றியேயாம்.

விளப்புற்ற என்றது, ப்ரஸித்திபெற்ற என்றபடி. பிராட்டியை இலங்கையிற் கண்டு பெருமாளிடம் சென்ற அனுமன் "விற்பெருந்தடந்தோள் வீர! வீங்குநீரிலங்கை வெற்பில், நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன், இற்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை யென்பதொன்றும் கற்

பெனப்படுவதொன்றுங் களிநடம்புரியக் கண்டேன்'' (கம்பராமாயணம்) என்றனன். இப்படிப்பட்ட பலவகை ப்ரஸித்திகள் இங்கு விவக்ஷிதம். "மதுரா மதுராலாபா'' என்று ஸ்ரீராமபிரானும் வாய்வெருவும்படியான பேச்சினிமைபெற்றவளாதலால் கிளிமொழியாள் எனப்பட்டது.

[நகரேரித்த—கமழ்முடியன்.] இராவணனைக் கொன்று லங்கைச்வர்யத்தை விபீஷணனுக்காக்கினபின் தன்னுடைய முடி தரிக்கப்பெற்றதுபோலும். "அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்| க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ=அபிஷிச்ய சலங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்—க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ.'' என்ற வான்மீகி வசனமுங் காண்க. அடியவர் முடிசூடப்பெறுவது தன பேறாயிருக்கை.

கடல் ஞாலத்து அளிமிக்கான் = இந்த ஸம்ஸார மண்டலத்திலே மிகுந்த அருளையுடையவன் என்கை. பரமபதவாஸத்திற்காட்டிலும் இங்கிலவுலகில் வஸிப்பதே எம்பெருமானுக்கு மிகவும் ப்ரியம் என்றவாறு. 'த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க அது உண்டதுருக்காட்டாதே தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ருஹ்ருதயம் கிடக்குமாபோலே ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய்'' என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி காண்க.

இப்படிப்பட்ட எம்பெருமான் விரும்பாத அறிவு எனக்கு ஏதுக்கு? "ஒண்தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு'' என்கிறபடியே அவனை நோக்கும் அறிவே அறிவு; என்று ஸித்தாந்தமாயிருப்பதுபோல, அவனால் விரும்பப்படும் அறிவே அறிவு-என்பதும் ஸித்தாந்தமாகிறதிங்கு. (ரு)

அறிவினால்குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய *
நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி *
குறியமாணுருவாகிக் கொடுங்கோளால்நிலம்கொண்ட *
கிறியம்மான்கவராத கிளரொளியால்குறைவிலமே. (சு).

அறிவினால் குறைவு இல்லா	'நமக்கு அறிவுஇல்லையே!' என்று குறைபடமாட்டாத	குறிய மாண் உரு ஆகி	வாமந ப்ரஹ்மசாரி வேஷத்தையுடையனாய்
அகல் ஞாலத்தவர் அறிய	விரிவான இவ்வுலகிலுள்ளாரனைவரும் அறியும்படியாக	கொடு கோளாள்	(மாவலியை வஞ்சிக்கையாகிற) கொடியவழியினால்
நெறி எல்லாம்	(கருமயோகம் முதலிய) ஸகலோபாயங்களையும்	நிலம் கொண்ட	பூமியைத் தன்னதாக்கிக் கொண்ட
எடுத்து உரைத்த	ஸாரமாகவெடுத்தருளிச் செய்த	கிறி	உபாயஜ்ஞனான
நிறை ஞானம்	பரிபூர்ண ஞானத்தையுடைய	அம்மான்	எம்பெருமான்
ஒரு மூர்த்தி	விலக்ஷணஸ்வாமியாய்,	கவராத	விரும்பாத.
		கிளர் ஒளியால் குறைவு இலம்	மிகுந்த லாவண்யத்தில் விருப்பமுடையோமல்லோம்.

மூலம். 220—2. சோராத மூவா வேர்முதலாய் உலகம் படைத்தவனென்கிற சிதசித் த்ரய த்ரிவிதகாரணமானவன் அறியாதனவறிவிக்கு உள்ளம்

[இரண்டாம்பத்தின் அர்த்த விசேஷங்களைச் சுருக்கியருளிச்செய்தல்.]

இரண்டாம்பத்தின் ஸாரமான கருத்தாவது:—அனைத்துக்கும் காரணபூதனான எம்பெருமான் கீழ்ப்பத்திலே தமக்கு அறியாதவற்றை அறிவித்தருள அதனாலே அறிவு பெற்ற ஆழ்வார் அந்த அறிவுக்குப் பலனான மோக்ஷத்தை அப்போதே பெறவேணுமென்று ஆசைப்பட்டுப் பெறாமையாலே விஷண்ணரானார்; அந்த விஷாதமெல்லாம் தீரும்படி எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷித்து ப்ரீதனானான்; அந்த ப்ரீதி இவரொருவரளவிலே நில்லாதே இவரோடு ஸம்பந்த ஸம்பந்தமுடையாரளவிலும் வெள்ளமிட்டு, அந்த ப்ரீதியாலே இவர்க்கு அவன் மோக்ஷத்தைக் கொடுக்கப்புகுந்தான்; ஆழ்வார் அந்த மோக்ஷத்தை அவனுடைய சேஷித்வத்துக்கும் தம்முடைய சேஷத்வத்துக்கும் தகுதியாம்படி நிஷ்கர்ஷித்தார். அதன்பிறகு, ஆச்ரயணீயனான அவனுக்குக் கீழ்ப்பத்தில் சொன்ன பரத்வத்தை நிலைபெறுத்துவனவான லக்ஷணங்களை வெளியிட்டு, அவற்றுக்குப் பொருத்தமான வசனப்ரத்யக்ஷங்களையும் காட்டினார். ஆச்ரயிப்பார்க்கு ருசி பிறக்கைக்காக த்யாஜ்யமான ஸம்ஸாரத்தினுடைய துஃக்கபஹுளத்வத்தையும், ப்ராப்யமான மோக்ஷத்தினுடைய ஆநந்த ப்ராசுர்யத்தையும், ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வகமோக்ஷப்ராப்திக்குறுப்பான ஸாதனத்தினுடைய ஸாரஸ்யத்தையும் முன்னிட்டுக்கொண்டு ஸகுணப்ரஹ்மோபாஸநத்தை விதித்து, அதற்கு அங்கமாக நிஷித்தாநுஷ்டாநத்யாகமும் க்ஷேத்ரவாஸம் முதலானவையும் செய்யவேணுமென்று இரண்டாம்பத்தால் அருளிச்செய்கிறாரென்பது மூல சூர்ணிகையின் தேர்ந்தகருத்து.

[இனி மூலத்தின்மேல் பொருள் விவரிக்கப்படுகிறது.]

இப்பத்தில் முக்கியமாக ஆழ்வார் பேசின பகவத்குணம் காரணத்வம். "சோராத மூவாவேர்முதலா யுலகம் படைத்தவன்'' என்னுமளவும் காரணத்வத்தில் நோக்கான சந்தைகளை அடுக்கியிருக்கிறார்.

[சோராத] * சோராத வெப்பொருட்கு மாதியாஞ்சோதி * [மூவா] * மூவாத்தனி முதலாய் * [வேர்முதலாய்] * எப்பொருட்கும் வேர்முதலாய் வித்தாய் * [உலகம்படைத்தவன்] * பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் * ஆக இந்த நான்கு பாசுரங்கள் இரண்டாம்பத்தில் எம்பெருமானுடைய காரணத்வத்தைக் கூறுவனவாம்.

[என்கிற] மேலே குறித்த பாசுரங்களினால் ப்ரதிபாதிக்கப்படுகிற.

[சிதசித் த்ரய த்ரிவிதகாரணமானவன்] மூன்று வகைப்பட்ட சேதனவர்க்கத்துக்கும் மூன்று வகைப்பட்ட அசேதனவர்க்கத்துக்கும் மூவகைக் காரணமாக

தேறி, தூமனம் மருளிலென்னும் ஜ்ஞானபலமான வொளிக்கொண்ட மோக்ஷம் தேடிவாட,

---

இருக்கின்ற எம்பெருமான் என்றபடி. பத்தர், முக்தர், நித்யர் என்று சேதந வர்க்கம் மூவகைப்படும். ப்ராக்ருதம், அப்ராக்ருதம், காலம் என்று அசேதந வர்க்கம் மூவகைப்படும். நிமித்தகாரணம் உபாதாநகாரணம் ஸஹகாரிகாரணம் என்று காரணம் மூவகைப்படும். எம்பெருமான் மூன்றுவகைப்பட்ட காரணமாக இருப்பது லீலா விபூதியிலும் நித்ய விபூதியிலும் என்றதாயிற்று. (இது எங்ஙனே யென்னில்;) லீலா விபூதியில் ஸங்கல்ப விசிஷ்டவேஷத்தாலே நிமித்த காரணமாகவும், ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட வேஷத்தாலே உபாதாந காரணமாகவும், ஞானம் சக்திமுதலிய குணவிசிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரி காரணமாகவும் ஆகின்றமை அறிக. இனி, நித்ய விபூதியிலோவென்னில், இச்சாவிசிஷ்டவேஷத்தாலே நிமித்த காரணமாகவும், அப்ராக்ருத சேதநாசேதந விசிஷ்ட வேஷத்தாலே உபாதாந காரணமாகவும், விநியோகங்கொள்ளுகைக்கு உபயுக்தமான ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடியிருக்குந்தன்மையாலே ஸஹகாரி காரணமாகவும் ஆகின்றமை அறிக. ஆகவே, பத்தமுக்தநித்யரூபமான சேதநத்ரயத்துக்கும், ப்ராக்ருத அப்ராக்ருத காலரூபமான அசேதந த்ரயத்துக்கும் நிமித்த—உபாதாந—ஸஹகாரிரூப காரணத்ரயமாக இருக்கின்ற ஸர்வேச்வரனானவன் என்றதாயிற்று.

இப்படிப்பட்ட எம்பெருமான் ஆழ்வார்க்குச் செய்தது என்னவென்றால், [அறியாதனவறிவிக்க] *அறியாதன வறிவித்த அத்தா! நீ செய்தன அடியேனறியேனே* என்னும்படியாக ஆழ்வார்க்கு அஜ்ஞாதமாயிருந்த தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாக அறிவித்தானாயிற்று.

அத்தாலே ஆழ்வார் நெஞ்சில் தெளிவுபெற்றாரென்கிறது [உள்ளம் தேறி] என்பதனால். *அடியை யடைந்து உள்ளந்தேறி* என்கிற பாசுரம் இங்கு விவக்ஷிதம். எம்பெருமானாலே அறியாதன அறிவிக்கப்பெற்ற ஆழ்வார் அவனைக்கிட்டி நெஞ்சில் தெளிவையுடையராகி—என்றதாயிற்று.

[இதன்பிறகு ஆழ்வார் என்னவிதமாக ஆனாரென்பது மேலேசொல்லுகிறது]

[தூமனம் மருளிலென்னும் ஜ்ஞாநபலமான ஒளிக்கொண்ட மோக்ஷம் தேடிவாட.] *தூமனத்தனனாய்* என்கிறபடியே மோக்ஷஹேதுவாகப் பரிசுத்தமான அந்தஃகரணத்தையுடையராய், *மருளில் வண்குருகூர் வண் சடகோபன்* என்கிறபடியே அவனுடைய கல்யாணகுண விஷயமான அஜ்ஞாநலேசமுமில்லாதபடியாய், கீழ்ப்பத்தில் பிறந்த தம்முடைய ஞானத்துக்குப் பலன் மோக்ஷமாகையாலே* களிப்புங் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதியமாய்—அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோ* என்று, நித்யஸூரிகளின் திரளிலே கூடப்பெறுவது எப்போதோவென்று அந்தமோக்ஷத்

உலராமலாவிசேர்ந்து சிக்கனப்புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல்மாறினரேன்னவாழ்வித்து உபகரிக்கிற நீந்தும் கேடலில் எம்மாவீட்டை

தைப் பெறுகையில் ஆசையாலே தேடினார்; அப்போதே கிடையாமையாலே *வாடிவாடு மிவ்வாணுதலே* என்று, ஆச்ரயத்தையிழந்த தளிர்போலே வாடினார்.

[இப்படி வாடினபிறகு என்னயிற்றேன்பது மேலே தெரிவிக்கப்படுகிறது]

[உலராமலாவிசேர்ந்து] * உள்ளுளாவி யுலர்ந்துலர்ந்து * என்னப்பட்ட தாபம் ஆறும்படி * அந்தாமத்தன்புசெய்து என்னாவி சேரம்மானுக்கு* என்கிறபடியே பரமபதத்தில் பண்ணும் வியாமோஹத்தை இவர் பக்கலிலேசெய்து, கமர்பிளந்த தரையிலே நீர்பாய்ச்சுவாரைப் போலே இவரோடே நிரவதிக ஸம்ச்லேஷத்தைப் பண்ணினனெம்பெருமான்.

[சிக்கனப்புகுந்து] *சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகளொக்கவே விழுங்கி—சிக்கனப்புகுந்தான் * என்று, மிகச்சிறியதொரு பதார்த்தமும் தன் பக்கலில் நின்றும் பிரிகதிர்ப்பட்டு நோவுபடாதபடி தன் ஸங்கல்ப ஏகதேசத்திலே ஸகலலோகங்களையும் ஒருகாலே வைத்து இனி எங்கும் போக வேண்டாதபடி புகுந்தும் நின்றான்.

[ஸம்பந்திகளும் சேர்தல் மாறினரேன்ன வாழ்வித்து] *எமர்கீழ்மேலெழுபிறப்பும் விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினர்* என்று, ஆழ்வாருடைய ஸம்பந்த ஸம்பந்திகளையும் வீடுபெற்றாரம்படி பண்ணி, அத்தாலே * கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழுபிறப்பும், மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா* என்று, என்னோடு பரம்பரயா ஸம்பந்தமுடையாரும் என் ஸம்பந்தமே ஹேதுவாகக் கேசவன் தமரானார்கள்; நிர்ஹேதுக பகவத்க்ருபையாகிற பெருஞ்சதிரைப்பெற்று ஸ்ரீவைஷ்ணவ ஸந்தானம் ஊற்றுமாறாமல் பெருகுகிறவிதம் எனனே! என்று இவர்தாமே ஆச்சரியப்படும்படி இவரை வாழ்வித்தான். "வாழ்வித்து" என்கிற வினையெச்சம் "உபகரிக்கிற" என்பதிலே அந்வயிக்கும் 'வாழ்வித்த எம்பெருமான் ஆழ்வார்க்குக்கொடுக்க நினைத்த மோக்ஷத்தை' என்று வாக்யார்த்தம் காண்க.

[உபகரிக்கிற நீந்துங் கேடலில் எம்மாவீட்டை.] இப்படி ஆழ்வாருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளளவிலும் வெள்ளமிடுகிற தன் ப்ரீதியாலே ஆழ்வார்க்கு எம்பெருமான் மோக்ஷத்தை உபகரிக்க நினைத்தான்; என்கிறது. * நீந்துந் துயரில்லாவீடு* *கேடலில் வீடு* எம்மாவீடு* என்ற மூன்று சந்தைகளைச்சேர்த்து "நீந்துங் கேடலி லெம்மாவீட்டை" என்றார். 'நீந்தும் துயரில்லாவீடு' என்றது து:கஸம்பாஹிதமான மோக்ஷமென்றபடி. 'கேடலில் வீடு' என்றது அநர்த்தகந்த முமில்லாத மோக்ஷம் என்றபடி. 'எம்மாவீடு' என்றது எவ்வகை

உபயாநுகுணமாக்கினவர்,
ஆச்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற

யாலும் விலக்ஷணமான மோக்ஷம் என்றபடி. ஆக இப்படிப்பட்ட மோக்ஷத்தை எம்பெருமான் கொடுக்கவிருக்கையில்,

[அந்த மோக்ஷத்தை ஆழ்வார் நிஷ்கர்ஷித்தபடி சொல்லுகிறதுமேல்]

[உபயாநுகுணமாக்கினவர்.] சேஷியான எம்பெருமானுடைய ஸ்வரூபத்துக்கும் சேஷபூதரான தம்முடைய ஸ்வரூபத்துக்கும் தகுதியாம்படி நிஷ்கர்ஷித்தார் என்கிறது. அதாவது என்னென்னில்; * எம்மாவீட்டுத் திறமும் * என்கிற திருவாய்மொழியானது புருஷார்த்தத்தை நிஷ்கர்ஷிப்பதாகும்;— இதற்குக் கீழ்த்திருவாய்மொழியில் * நலமந்தமில்ல தோர்நாடுபுகுவீர் * இத்யாதிகளாலே ஆழ்வார் திருநாட்டைப்பற்றி ப்ரஸ்தாவஞ் செய்ததுகண்ட எம்பெருமான் 'இவர்க்கு மோக்ஷத்திலே ருசியாகில் அதை இவர்க்குக் கொடுத்துவிடுவோமே' என்று திருவுள்ளம்பற்றி 'ஆழ்வீர்! நீர் அபேக்ஷிக்கிற மோக்ஷத்தைக் கொள்ளும்' என்றருளிச்செய்ய, அதுகண்ட ஆழ்வார் 'எம்பெருமான் இங்ஙனே சொல்லிக்கொடுக்கிற மோக்ஷம் நமக்கு ஏதுக்கு? நம்முடைய அபேக்ஷிதத்தை நிறைவேற்றவேணுமென்கிற திருவுள்ளத்தோடே அவன் தந்தருளும் மோக்ஷம் நமக்குப் புருஷார்த்தமாகுமோ? அவன்றன்னுடைய ருசிக்கீடாகக் கொடுத்தருளினால் அது பாங்கேயல்லது நம்முடைய ருசிக்காகக்கொடுக்குமது நமக்கு நரகத்தோடொக்கு மத்தனை' என்று திருவுள்ளம்பற்றி, 'பிரானே! நான் முக்தனாகி எல்லையிலின்பம் அநுபவிக்கவுமாம்; கைவல்யாநுபவத்தைப் பெறவுமாம், ஆத்மவிநாசமேயாகவுமாம்; நரகாநுபவம் பண்ணவுமாம்: இவற்றில ஒன்றிலும் எனக்கொரு நிர்ப்பந்தமில்லை; உன்னுடைய ருசிக்கீடாகவருமதாகில் இவையித்தனையும் வரவுமாம்; எனக்காக வருமதாகில் மோக்ஷமும்வேண்டா; ஆனபின்பு உன்னுடைய ருசிக்கு ஏற்றது எதுவோ அதுவே எனக்கு ஆம்படி பண்ணியருளவேணும்; என்றார். * தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே, எனக்கே கண்ணனையான்கொள் சிறப்பே. * என்கிற பாசுரம் (எம்மாவீட்டில்) உயிர்நிலையாயிருக்கும். இப்படி சேஷ சேஷிகளான இருவருடையவும் ஸ்வரூபத்துக்குத் தகுதியாகப் புருஷார்த்த நிஷ்கர்ஷம் செய்தருளின ஆழ்வார்,

[இனி, ஆழ்வார் ஸம்ஸாரிகளுடைய வாழ்ச்சிக்காக நிரூபித்தவற்றைச் சொல்லுகிறது.]

[ஆச்ரயணீயனுக்குப் பூர்வோக்தபரத்வத்தை ஸ்தாபிக்கிற ஸகலபல ப்ரதத்வ காரணத்வ சேஷசாயித்வ ச்ரிய: பதித்வ ஸௌலப்யாதிகளைத் திண்ணனவீடென்று வெளியிட்டு] தொழத்தகுந்தவனான எம்பெருமானுக்கு முதற்பத்தில் சொல்லப்பட்ட ஸர்வஸ்மாத் பரத்வத்தை நிலைபெறுத்துவனவான ஸகலஐச்வர்யத்வம் முதலான குணங்களை * திண்ணன் வீடு * அணைவதரவணை

ஸகல பல ப்ரதத்வ காரணத்வசேஷசாயித்வ ச்ரிய: பதித்வ ஸௌலப்யாதிகளைத் திண்ணனவீடென்று வெளியிட்டு, கள்வாதீர்த்தனென்று வசனப்ரத்யக்ஷங்களுங்காட்டி,

மேல் * என்கிற இரண்டு திருவாய்மொழிகளாலே வெளியிட்டார். (எங்ஙனேயென்னில்;) * திண்ணன்வீடு முதல்முழுதுமாய் * என்று ஸகலஐச்வர்யத்வத்தை வெளியிட்டார்; * கருத்தில் தேவுமெல்லாப் பொருளும் வருத்தித்தமாயப்பிரான் * என்றும் * ஆக்கினான் தெய்வவுலகுகளே * என்றும் ஸர்வகாரணத்வத்தை வெளியிட்டார். * அணைவதரவணைமேல் * என்று சேஷசாயித்வத்தை வெளியிட்டார். * பூம்பாவையாகம் புணர்வது * என்று ச்ரிய: பதித்வத்தை வெளியிட்டார். * இணைவனாமெப்பொருட்கும் * என்று அவதாரப்ரயுக்த ஸௌலப்யத்தை வெளியிட்டார். "ஸௌலப்யாதிகளை" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே, மோக்ஷோபாயத்வம், ஆபத்ஸகத்வம். ஸர்வரக்ஷகத்வம் என்கிறவற்றைக்கொள்க. * புணைவன் பிறவிக்கடல் நீந்து வார்க்கே * என்று மோக்ஷோபாயத்வமும், * ஆனையிடர் கடிந்த * என்று ஆபத்ஸகத்வமும், * மூவுலகுங்காவலோன் * என்று ஸர்வரக்ஷகத்வமும் வெளியிடப்பட்டமைகாண்க. கீழ்ப்பத்தில் கூறப்பட்ட பரத்வத்தை நன்கு ஸ்தாபிக்கவேண்டி இவற்றையெல்லாம் வெளியிட்டாராயிற்று.

[கள்வாதீர்த்தனென்று வசநப்ரத்யக்ஷங்களும் காட்டி.] எம்பெருமானுடைய பரத்வத்தை வசனபலத்தாலும் ப்ரத்யக்ஷபலத்தாலும் நிரூபிக்க இரண்டு பாசுரங்கள் அருளிச்செய்தார். எங்ஙனேயென்னில்; * கள்வா! எம்மையுமேழுலகும், நின்னுள்ளே தோற்றிய இறைவவென்று, வெள்ளேறன்நான் முகனிந்திரன் வானவர், புள்ளூர்திகழல் பணிந்தேத்துவரே. * தேவர்கள் எம்பெருமான் பக்கலிலேவந்து வரங்கொள்ளும்போது 'நீர் எங்களிடத்தேவந்து வரங்கேட்பதாகவுங்காட்டி எங்களைப் பெருமைப்படுத்தவேணும்' என்றும் வரங்கேட்பர்களாம்; எம்பெருமான் அதற்கு இணங்கி 'ருக்மிணிப்பிராட்டிக்கு ஒரு பிள்ளைவேணும்' என்று சிவபிரானிடத்தே வரங்கேட்பனும். இங்ஙனே இன்னமும் சிலதேவர்களிடத்திலும் வரங்கேட்பதுண்டு; அப்படிப்பட்ட எம்பெருமானே பெரியதிருவடியை மேற்கொண்டு புறப்பட்டால் அவனுடைய திருவடிகளிலே விழுந்து பிரமன் சிவனிந்திரன் முதலான தேவர்கள் கள்வா! என்று சொல்லிக்கழல் பணிந்து ஏத்துவர்களாம்; "அந்தோ! பிரானே! பரத்பரனாயிருக்கிற நிலைமையை மறைத்துக்கொண்டு எங்களை வரங்கேட்கிறது என்னகள்வமோ?" என்றீடுபடுவர்களாம். இவ்விடத்தில் விவக்ஷிதங்களான வசனங்களாவன;—* [illegible] [illegible] [illegible] [illegible] = அந்யம் தேஹி வரம் தேவ! ப்ரஸித்தம் ஸர்வஜந்துஷு; மர்த்யோ பூத்வா பவாநேவ மாபூ:

ராதய கேஶவ, மாம் வஹஸ்வ ச தேவேஶ வரம் மத்தோ க்ருஹாண ச. யேநாஹம் ஸர்வதேவாநாம் பூஜ்யாத் பூஜ்யதரோபவம்.'' (இங்கு ஸவ்ய என்றது ஹவ்ய என்றபடி.) இதற்கு எம்பெருமானுடைய மறுமொழிவருமாறு;— (வராஹபுராணத்தில் ருத்ரகீதையில்) * தைவகார்யாவதாரேஷு உநாஷ்ரு க்ஷேவயிவாநு! க்ஷாவோராயயிஷ்ரு இதி ஹர க்ஷம வரதோ ஸவ =தேவகார்யாவதாரேஷு மநுஷ்யத்வமுபேயிவாந், த்வாமேவாராதயிஷ்யாமி ஹர! த்வம் வரதோ பவ. * என்பதாம்.

''கள்வா தீர்த்தனென்று வசந ப்ரத்யக்ஷங்களுங் காட்டி'' என்ற மூலத்தை [கள்வாவென்று வசனங்காட்டி, தீர்த்தனென்று ப்ரத்யக்ஷங்காட்டி] என்று முறையே அந்வயித்துக்கொள்க. கள்வாவென்று வசனங்காட்டினமை விவரிக்கப்பட்டதாயிற்று. தீர்த்தனென்று ப்ரத்யக்ஷம் காட்டினமை இனிவிவரிக்கப்படுகிறது.

* தீர்த்தனுலகளந்த சேவடிமேல் பூந்தாமம், சேர்த்தியவையே சிவன் முடிமேல் தான்கண்டு, பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை, பேர்த்து மொருவரால் பேசக்கிடந்ததே. * மஹாபாரதயுத்தத்தில் அர்ஜுநனுக்குப் பாசுபதாஸ்த்ரம் வேண்டியிருந்தது; சிவபிரானை ஆராதித்து அதனைப் பெறவேணுமென்று அவன் முயற்சிசெய்யப் போகையில், இவனுக்கு இத்தனை பரிச்ரமம் ஏதுக்கு? என்று கருணைகொண்ட கண்ணபிரான் அவ்வர்ஜுநனை நோக்கி 'ருத்ரனிடத்தில் நீ செய்ய நினைத்திருக்கிற ஆராதனையை என்கண்ணிலே செய்து அபேக்ஷிதம் பெறுவாயாக' என்று கட்டளையிட்டுத் தனது முழங்காலைக் காட்ட, அங்கே அவன் சில புஷ்பங்களையிட்டு அர்ச்சிக்க, அற்றையிரவு கனவிலே உருத்திரக்கடவுள் புஷ்பங்களைத் தனது தலையிலணிந்துகொண்டு வந்து காட்சிதந்து அஸ்த்ரப்ரதானம் பண்ணினதாகவுள்ள கதை இங்கு அறியத்தக்கது. எம்பெருமானுடைய பரத்வத்தை அர்ஜுநன் ப்ரத்யக்ஷீகரித்ததனாலே ''ப்ரத்யக்ஷங் காட்டி'' என்றருளிச்செய்யப்பட்டது. (காட்டி என்கிற வினையெச்சம் விதிக்கிற என்னும் க்ரியையிலே அந்வயிக்கும்.)

[புலனைந்தென்று ஸம்ஸார மோக்ஷஸாதந து:க்கானந்தரஸம் முன்னுக விதிக்கிற அந்தர்க்கத குணோபாஸநத்தை] வேதாந்தமானது எம்பெருமானுடைய குணங்களை உபாஸிக்கும்படி விதித்ததுபோலே ஆழ்வாரும் இப்பத்தில் விதித்திருக்கிறார். வேதாந்தம் விதித்தது எங்கே யென்னில்; * தஸ்மிந் யதந்தஸ் — தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம் * என்கிற உபநிஷத்வாக்யம் காண்க. அந்த பரப்ரஹ்மத்தினுள்ளே எது இருக்கின்றதோ அது உபாஸிக்கத்தக்கது என்பது இதன்பொருள். அந்தர்கதம் எது என்றால், அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் என்பது ஸம்ப்ரதாயம். அதுபோலவே

15993?

ஆழ்வாரும் *பலமுந்து சீரில் படிமின் ஓவாதே *என்கிற பாசுரத்தினால் குணோபாஸநத்தை விதித்திருக்கிறார். ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பற்றவேணுமானால் விடவேண்டிய வஸ்துவின் ஹேயத்வமும் பற்றவேண்டியவஸ்துவின் உபாதேயத்வமும் நன்கு தெரியவேணும். தெரிந்தாலன்றி ஒன்றைவிட்டு மற்றொன்றைப்பற்ற இயலாது. அதற்காக, ஸம்ஸாரத்தினுடைய துக்கமும் மோக்ஷத்தினுடைய ஆநந்தமும் தத்ஸாதனமான குணோபாஸனத்தின் ஸாரஸ்யமும் மூன்றுமுன்னம் தெரிவிக்கவேண்டியதாயிற்று. அந்த மூன்றையும் *புலனைந்துமேயும் பொறியைந்து நீங்கி * என்கிற பாசுரத்தாலே வெளியிட்டார். அல்பாஸ்திரத்வாதிதோஷதுஷ்டமான ஶப்தாதிபோகங்களை யநுபவித்திருக்கும் ஸம்ஸாரத்தினுடைய து:க்கமயத்வத்தை * புலனைந்துமேயும் * என்கிறபாட்டில் முதலடியாலே தெரிவித்தார். * நலமந்தமில்லதோர்நாடு *என்கிற இரண்டாமடியாலே மோக்ஷத்தினுடைய ஆநந்தமயத்வத்தைத் தெரிவித்தார். சிலகாரியங்கள் முதலிலே மிகவருத்தமாய் முடிவிலே இன்பமாயிருக்கும்; பகவத்குணாநுபவம் அப்படி யன்றிக்கே, ஸாரஸ்யத்தாலே ஆரம்பதசையே பிடித்துப் பலனாகவேயிருக்குமென்னும் பொருள்பட (ஈற்றடியில்) ''பலம்முந்து சீரில்'' என்றருளிச்செய்கையாலே ஸாதந பூதமான குணோபாஸநத்தின் ஸாரஸ்யம் தெரிவிக்கப்பட்டது. ஆக இம்மூன்றையும் தெரிவித்துக்கொண்டே * சீரில்படிமினோவாதே * என்று குணோபாஸநத்தை விதித்தாராயிற்று. குணத்திற்கு *அந்தர்கத *என்று விசேஷணமிட்டது * தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம் *என்கிற வேதாந்தவாக்யத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபனம் பண்ணுவதற்காகவேயாம்.

[ஸம்ஸார மோக்ஷஸாதந து:க்கானந்தரஸம் என்றது, ஸம்ஸார து:க்கம், மோக்ஷானந்தம், ஸாதநரஸம் என்றபடி. ஸம்ஸாரம் து:க்கபஹுளம் என்பதையும், மோக்ஷம் ஆனந்தமயம் என்பதையும், ஸாதநம் ரஸமயம் என்பதையும் தெரிவித்துக்கொண்டு *புலனைந்தென்கிற பாசுரத்தினால் குணோபாஸநத்தை விதித்தார் என்றதாயிற்று.]

[அங்கியானஸகுணப்ரஹ்மோபாஸநத்திற்கு நிஷித்தாநுஷ்டானங்களினுடைய த்யாக பூர்வகமாக க்ஷேத்ரங்களில் வஸிப்பது முதலியவை அங்கங்களாகையாலே அவற்றையும் கூட்டி உபதேசிக்கிறரென்கிறது மேல்.]

[மதித்துப்பெருக்கி யித்யாதி.] இவ்விரண்டாம்பத்தில் பரோபதேசபரமான திருவாய்மொழி *கிளரொளியிளமையாகையாலே அதில் உபதேசித்த அம்ஶங்களை விவரிக்கின்றது இந்த வாக்கியம். அதில் முதற்பாட்டில் *கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்—மாலிருஞ்சோலை சார்வது சதிரே* என்று க்ஷேத்ரவாஸத்தை விதித்தார்; *பதியது வேத்தி *என்று ஸங்கீர்த்தனத்தை விதித்தார். *மாலிருஞ்சோலை தொழக்கருதுவதே *என்று அஞ்ஜலியை

யழுந்திக் கீழ்மைவலஞ் சூதுஞ் செய்து இளமை கெடாமல் செய்யும் க்ஷேத்ரவாஸ ஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரதக்ஷிண மதிவிநநாஹஜ்ஞயாகூ மாக்குகிறார் இரண்டாம்பத்தில்.

விதித்தார் *வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கே *என்று ப்ரதக்ஷிணத்தை விதித்தார். *நெறிபட அதுவே நினைவது நலமே *என்று கதிசிந்தனையை விதித்தார். ஆகிய இவையெல்லாம் ஸகுணப்ரஹ்மோபாஸநத்திற்கு அங்கபூதங்கள். இவை நிஷித்தாநுஷ்டாநத்யாக பூர்வகங்களாக இருக்கவேண்டுகையாலே "மதித்துப்பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மைவலம் சூதும்செய்து இளமைகெடாமல்" என்கிற வாக்கியத்தினால் அது காட்டப்படுகிறது *சதிரிளமடவார் தாழ்ச்சியை மதியாது *திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது *வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது *நலமென நினைமின் நரகழுந்தாதே *கிறியெனநினைமின் கீழ்மை செய்யாதே *வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே *சூதென்றுகளவும் சூதும் செய்யாதே *என்கிற சந்தைகளில், உபாஸந விரோதியான இதரவிஷயப்ராவண்யத்தைச் செய்பலாகாதென்றும், அத்தாலே பாவங்களைக் கூடு பூரிக்கலாகாதென்றும், அவற்றிலே மூழ்கித் தரைப்பட்டுத் தண்மையைச்செய்து பலத்தைப் பாழ்போக்கிச் சூதுங்களவும் செய்து இப்படி இளம்ப்ராயத்தைப் பாழே போக்கலாகாதென்றும் அருளிச்செய்யப்பட்டது.

ஆக இரண்டாம் பத்தால்—எம்பெருமானுடைய காரணத்வத்தைவெளியிட்டமை, அந்த எம்பெருமானாலே ஆழ்வார்தாம் அறியாதன அறிவிக்கப்பெற்று உள்ளம் தேறினமை. ஜ்ஞானபலமான மோக்ஷத்தைத் தேடிவாடினமை, அந்த வாட்டம்தீர எம்பெருமான் விசேஷாநுக்ரஹம் செய்து மோக்ஷத்தையும் கொடுப்பதாக இருந்தமை, அந்த மோக்ஷஸ்வரூபத்தை ஆழ்வார் நிஷ்கர்ஷித்துப்பேசினமை, ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்க வொருப்பட்டு ஸகுணப்ரஹ்மோபாஸநத்தை ஸாங்கமாக விதித்தமை-ஆகிற இவையெல்லாம் பேசப்பட்டனவென்றதாயிற்று.

தத்வத்ரயத்துக்கும் மூவகைக்காரணபூதனான ஸர்வேச்வரன் ஆழ்வார் தமக்கு அறியாதன அறிவித்தான்; அத்தாலே உள்ளம் தேறி மோக்ஷத்தைத் தேடிவாடினார் ஆழ்வார்; உடனே வாட்டந்தணிய எம்பெருமான் ஆழ்வாரோடே சேர்ந்து சிக்கனப்புகுந்து ஸம்பந்தி ஸம்பந்திகளையும் வாழ்வித்தான்; ஆழ்வார பேக்ஷித்த மோக்ஷத்தையும் தருவதாக நின்றான்; அந்த மோக்ஷத்தை ஆழ்வார் உபயஸ்வரூபாநுகுணமாக நிஷ்கர்ஷித்தார். இப்படிப்பட்ட ஆழ்வார், ஸம்ஸாரிகளையும் உபதேசமுகத்தாலே திருத்திப்பணிகொள்ளவேண்டி அவர்களுக்கு ஸகுணப்ரஹ்மோபாஸநத்தை விதிக்கப்புகுந்து, ஸம்ஸாரம் துக்கமயம் என்பதையும், மோக்ஷம் ஆனந்தமயம் என்பதையும், தத்ஸாதநமான உபாஸநம் ரஸமயம் என்பதையும் நிரூபித்துக்கொண்டே ஸாங்கமாக விதித்தார்—என்பதாக மூலத்தின்மேலே அறியவேண்டியவாக்யார்த்தம்.

15993K